# உத்தியோகம் பெற்றுத் தருவதாக லஞ்சம்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 234
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 17 ஷஃபான் 1 சனிக்கிழமை (3-10-70)

சரஸ்வதி படமும், நவராத்திரி வரலாறும், தேவி தோத்திரப் பாடல்களும்

மேற்படி படங்கள், புத்தகங்களை பெற விரும்பும் பாடசாலைகள், ஜன சமூகநிலையங்கள், கிராமச்சங்கங்கள், பஜனைச்சபைகள், கூட்டுப்பிரார்த்தனைச் சபைகள் ஆகியன தமது அத்தாட்சிப் பத்திரங்களைக் கொடுத்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

கிளை: 83, ஜிந்துப்பிட்டி வீதி,
கொழும்பு-13.

தீபாவளி விற்பனை!

சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருக்கும் தேவையான

புடவை வகைகள்

ஏராளமான டிசைன்கள் எமது கையிருப்பிலுண்டு. உங்கள் தீபாவளி தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முந்துங்கள்.

ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்
166, கே.கே.எஸ்.றோட், -யாழ்ப்பாணம்.

## வாங்கினராம்

## கட்சி ஊழியர் பிணையில் விடுதலை

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றுத்தருவதாகக்கூறி ஓர் இளைஞனிடம் லஞ்சம் வாங்கியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த ஒருவர் லஞ்ச ஊழல் தடுப்பு கமிஷனர் காரியாலய அதிகாரிகளால் பிடிபட்டு யாழ்ப்பாணம் பொலிசில் ஒப்படைக்கப் பட்டார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்த்ரக்கட்சி அலுவலகத்தில் முழுநேர ஊழியராகப் பணியாற்றுபவர் என்று கருதப்படும் ஒருவரே பொலிசில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின்பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பவராவார்.

இவர்மீது லஞ்சம் வாங்கியதாக குற்றஞ்சாட்டிவழக்குத் தொடரப்படவிருக்கிறதாம்.

கொழும்பிலிருந்து வந்த லஞ்சத்தடுப்பு இலாகா அதிகாரிகள் நேற்றுமாலை கொழும்புக்குதிரும்பிச் சென்றனர்.

### பொலிசுக்கு புகார்கள்

அரசாங்கத்தில் உத்தியோகம்பெற்றுத்தருவதாகக்கூறி சிலர் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தங்களுக்குப்பலபுகார்கள் கிடைத்திருப்பதாகவும் இந்தப்புகார்களைத் தொடர்ந்து பொலிசார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் பொதுமக்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியமென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# சிகரட் விநியோகத்தை அரசு ஜனவரிமுதல் பொறுப்பேற்கும்

## கூ. மொ. வி. கூட்டுறவு சங்கங்களே இனி ஏஜண்டுகள்

### பல லட்சம் ரூபாய் இலாபம் கிடைக்குமாம்

கொழும்பு, வெள்ளி

**சிகரட் விநியோகம் முழுவதையும் அடுத்த ஜனவரியிலிருந்து அரசாங்கமே எடுக்கவிருக்கிறது. சிகரட் விநியோகத்தை எடுப்பதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்துக்கு வருமானமாகக்கிடைக்கும் என உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் கருதுகிறார்.**

சிகரட் விநியோகத்தை தனியார் கம்பனிகளிடமிருந்தும் அவர்களின் ஏஜன்டுகளிடமிருந்தும் எடுத்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதென்று உள்நாட்டுவெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின தீர்மானித்திருக்கிறார். இத்தீர்மானம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் ...

... தனது கிளைகள்மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கும். இப்பொழுது இக்கம்பனி ஏஜன்டுகள் மூலமே சிகரட் விநியோகம் நடைபெறுகிறது. இந்தக்கம்பனியில் பிரிட்டிஷாருக்கும் பங்கிருக்கிறது. இந்தக் கம்பனியின் மனேஜிங் டைரக்டராக இருக்கும் ஜே. ஆர். பேர்டிட் இம்மாதம் 15-ந் திகதி பதவி விலகி ...

## கனிஷ்ட பல்கலைகழகத்தில் டிப்ளோமா

பருத்தித்துறை, வெள்ளி

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக ஆங்கில டிப்ளோமா வகுப்பிற்கு ஐந்து பயிற்சியாளர் தெரிவு செய்யப்பட் ...

## 'பாரதி லட்சியங்கள் ஈடேற உழைக்க வேண்டும்'

### பாரதி விழாவில் யாழ். மேயர்

யாழ்ப்பாணம், சனி

'பாரதி விழாவைக்கொண்டாடினால் மட்டும்போதாது. அவருடைய உன்னத இலட்சியங்கள் ஈடேறப்பார்த்துக் கொள்ள வேண்டும். பாரதி கனவுகள் நனவுகளாக மாற அவற்றைச் சாதனையாக்கிக் கொள்ள வேண்டும்.'

இவ்வாறு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பாரதி மன்றத்தால் இரு நாட்களாகக் கொண்டாடப் பட்ட பாரதி விழாவின் இரண்டாம்நாள் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ். மாநகரமுதல்வர் திரு. தா. துரைராஜா குறிப்பிட்டார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அலங்கார ... விழாவைத் தொடக்கிவைத்தார்.

முதல்நாள் விழாவிற்கு திரு. எஸ். செல்வநாயகம் தலைமை தாங்க திரு. கா. பொ. இரத்தினம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, முதலியார் சி. முத்துத்தம்பி முதலியோர் உரைநிகழ்த்தினர் முதல்நாள் நிகழ்ச்சியின் இறுதி நிகழ்ச்சியாக சங்கீத பூஷணம் பொன், சுந்தரலிங்கத்தின் சங்கீதக் கச்சேரி இடம் பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நாதஸ்வர கலாநிதி எம். கே பத்மநாதன் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகியது யாழ். மாநகர முதல்வர் திரு. தா. ச. துரைராஜா மங்கள விளக்கேற்றி ...

## இன்று சீன தேசிய விழா

யாழ்ப்பாணம் சனி

மக்கள் சீனக்குடியரசின் தேசியதின விழா யாழ் நகர மண்டபத்தில் இன்றுமாலை நடைபெறவிருக்கிறது இலங்கை சீன நட்புறவுச் சங்கத்தின் சார்பில் இவ்விழா நடைபெறும்.

## மானிப்பாய் இந்துக்கல்லூரி பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் இந்துக்கல்லூரி பரிசளிப்புவிழா இன்று மாலை 6 மணிக்கு கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறும். திரு. ந. சத்தியேந்திரா பரிசளிப்புப் பேருரை நிகழ்த்துவார்.

## நவராத்திரி விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண சைவமுன்னேற்றக்கழக நவராத்திரி விழா இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-30 பண்ணிசை'- திவ்ய ஜீவன சங்கம், 6-00 தலைமையுரை முதலியார் செ. முத்துத்தம்பி- 6-15 தாளவாத்தியக்கச்சேரி(எம். என் செல்லத்துரை-மிருதங்கம். கே கணேசன் - தவில்) 8-00 இன்னிசை விருந்து-குணபூசணி நாகலிங்கம்.

## திவ்ய ஜீவன சங்கம்

யாழ்ப்பாணம் திவ்ய ...

வன்முறையைக் குறிக்கும்

## சிங்கக் கொடியை மாற்றி அமையுங்கள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படும் பொழுது அதன் தேசியக் கொடி புதுமாதிரியாகவும் பொதுவானதாகவும் அமைய வேண்டும் என்று திரு. ஏ. கே. ஆர் வேதவனம் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் தெரிவித்துள்ளார்.

இப்போது வாளொன்றைக் கையில் பிடித்தபடி காட்சியளிக்கும் சிங்கம் பொறிக்கப்பட்ட கொடி வன்முறையைச் சுட்டுவதாக உள்ளதென்றும் அதற்குப்பதில் அமைதியையும் நல்லெண்ணத்தையும் குறிக்கும் சின்னம் கொடியில் இடம்பெற வேண்டுமென்று தப்பட வேண்டுமென்றும் மக்கள் அவர்களின் மொழியாலேயே ஆளப்பட வேண்டும். இல்லையெனில் அது சுதந்திரமாகாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மதச் சார்பற்றதாக இருக்க வேண்டுமென்றும் திரு வேதவனம் வலியுறுத்தியுள்ளார்,

இப்போதைய அரசியல் அமைப்பு சிறுபான்மை மக்கள்மீது பெரும்பான்மையோர் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிசெய்கிறதென்றால் அது ஏகாதிபத்தியம்தான். வெளிநாட்டிலிருந்து வரும் ஏகாதிபத்தியத்தை விட உள்நாட்டு ஏகாதிபத் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதென்று உள்நாட்டுவெளி நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின தீர்மானித்திருக்கிறார். இத் தீர்மானம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

இலங்கையில் இப்போது சிகரட் தயாரிக்கும் ஓரேஒரு கம்பனியான சிலோன் டுபாக்கோகம்பனி உற்பத்தி செய்யும் முழு சிகரட்டுகளின் விநியோகத்தையும் கூமொ விஸ்தாபனம் ஏற்று கள் மூலமே சிகரட் விநியோகம் நடைபெறுகிறது. இந்தக்கம்பனியில் பிரிட்டிஷாருக்கும் பங்கிருக்கிறது. இந்தக் கம்பனியின் மனேஜிங் டைரக்டராக இருக்கும் ஜே ஆர். பேர்டிட் இம்மாதம் 15-ந் திகதி பதவி விலகி பிரிட்டன் செல்கிறார். எஸ் பி. வணிகசேகரா என்ற இலங்கையர் இக்கம்பனியின் மானேஜிங்டைரக்டர் பதவி வகிக்கும் முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

## அரசாங்க லொறிச்சேவை

லொறிப் போக்குவரத்துச் சேவையொன்றை அரசாங்கமே ஆரம்பிப்பதற்கான திட்டமொன்றையும் அமைச்சர் திரு இலங்கரத்தின தயாரித்திருக்கிறார். பொருள்களின் குறிப்பாக மலைநாட்டுக் காய்கறிகளின் விலைகள் அதிகரிப்புக்குக் காரணமாகவிருக்கும் பெரிய முதலாளிகளின் கைகளிலுள்ள லொறிப் போக்குவரத்துச் சேவையை உடைப்பதே இதன் நோக்கமாகும்.

(சி பி ஏ.)

# வடக்கில் இளைஞர் கைத்தொழில் சங்கம்!

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தில் இளைஞர் கைத்தொழில் சங்கம் விரைவில் உருவாகவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேலையில்லாத பட்டதாரிகளை ஒன்றிணைந்து, இளைஞர்களை தொழில் துறைக்கு வழி காட்டுவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருக்கும்.

தொழில் துறையில் நல்ல அனுபவமுள்ள ஒரு சிலரும், கல்வித்துறையிலுள்ள சில அதிகாரிகளும், மற்றும் சில பட்டதாரி இளைஞர்களும் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

பொறியியல் துறையில் பட்டம் பெற்ற ''மைற்'' ஸ்தாபன அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, வடபகுதி கல்வி அதிபதி திரு சங்கரலிங்கம், யாழ். மாநகர சபை கமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரம், திரு. நந்தலால் நேரு உட்படப் பலர் இம்முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இந்தச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

(கு. வி. ம.)

## பல்கலைகழகத்தில் டிப்ளோமா

பருத்தித்துறை, வெள்ளி

பலாலி களிஷ்ட பல்கலைக்கழக ஆங்கில டிப்ளோமா வகுப்பிற்கு ஐந்து பயிற்சியாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

......

## கல்வி அமைச்சரை கோருவர்

உடுப்பிட்டி வெள்ளி

கரவெட்டி ஸ்ரீநாரத தமிழ்ப்பௌத்த பாடசாலைக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்பிவைக்குமாறு கரவெட்டி மேற்கு சனுவில் சனசமூகநிலையம் கல்வியமைச்சரைக் கேட்டுள்ளது

இப் பௌத்த பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடமொன்றும் அமைத்துத்தருமாறும் கோரப்பட்டுள்ளது

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பணம், சனி

பதில் நிதிஅமைச்சர் திரு. பேர்னாட் சொய்சா இன்று காலை வட பகுதியிலுள்ள சமசமாஜ கிளை உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார்.

இன்றுபிற்பகல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறும் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் மந்திரி கலந்து கொள்வார்'

மாலை யாழ்ப்பாணம் சுதந்திரக்கட்சிகிளை காரியாலயத்தில் திரு. ஏ. ரி. துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பதில் அமைச்சர் உரைநிகழ்த்துவார்.

சாவகச்சேரியில் சமசமாஜக் கட்சிக்கிளை யொன்றை திறந்து வைப்பதோடு கைதடி சமசமாஜ கிளைக்கும் மந்திரிவிஜயம்செய்வார்.

இரண்டாம் நாள் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ். மாநகரமுதல்வர் திரு. தா. துரைராஜா குறிப்பிட்டார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட அலங்கார பந்தரின்கீழ் பாரதிவிழா கோலாகலமாக நடைபெற்றது. அளவெட்டி சிதம்பரநாதன் கோஷ்டியின் நாதஸ்வர இசையுடன் விழா ஆரம்பமானது. பந்தரின் கீழ் மேடையில் வைக்கப்பட்டிருந்த பெரிய அளவிலான பாரதியார்உருவப்படத்தை மாநகர துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார். யாழ். அரசாங்க உதவி அதிபர் திரு. முருகேசம்பிள்ளை குத்துவிளக்கேற்றி வைத்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நாதஸ்வர கலாநிதி எம்.கே பத்மநாதன் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகியது' யாழ். மாநகர முதல்வர் திரு. தா. ச. துரைராஜா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து உரை நிகழ்த்தினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு பாரதி மன்றத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமை தாங்கினார். ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராஜா, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றினர். இசைப் புலவர் திரு. சண்முகரத்தினத்தின் இன்இசைக் கச்சேரியும் இடம்பெற்றது. திரு. எஸ். வேலுப்பிள்ளை நன்றிதெரிவித்துப்பேசினார்.

தாளவாத்தியக்கச்சேரி(எம். என் செல்லத்துரை-மிருதங்கம். கே கணேசன் - தவில்) 8-00 இன்னிசை விருந்து-குணபூசணி நாகலிங்கம்.

## திவ்ய ஜீவன சங்கம்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க நவராத்திரி விழா இன்றைய நிகழ்ச்சிகள்:

கதாப்பிரசங்கம்-ஈ. வடிவேல், சொற்பொழிவு-கே ஈ கதிர்காமலிங்கம் (முடிக்குரிய வழக்கறிஞர்) (குவிம)

கையில் பிடித்தபடி காட்சியளிக்கும் சிங்கம் பொறிக்கப்பட்ட கொடி வன்முறையைச் சுட்டுவதாக உள்ளதென்றும் அதற்குப்பதில் அமைதியையும் நல்லெண்ணத்தையும் குறிக்கும் சின்னம் கொடியில் இடம்பெற வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்களம் மட்டும் சட்டம் மாற்றப்பட்டு சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் முழு அங்கீகாரம் அளிக்கும் சட்டம் ஏற்படுத் களமீது பெரும்பான்மையோர் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி செய்கிறதென்றால் அது ஏகாதிபத்தியம் தான். வெளிநாட்டிலிருந்து வரும் ஏகாதிபத்தியத்தை விட உள்நாட்டு ஏகாதிபத்தியத்தை சகித்துக் கொள்வது பெரும் கஷ்டமாகும். புதிய அரசியல் திட்டத்தினால் ஏதாவது பயனேற்பட வேண்டுமானால் இந்த நிலைமைகளை அது முற்றாக ஒழிப்பதாய் இருக்க வேண்டும். சிறுபான்மையோர் சுதந்திரம், சமத்துவம், நல்லுறவு இவைகளைத்தான் கோருகிறார்கள் என்று அவர் தமது அறிக்கையில் விளக்கியுள்ளார்.

## இலங்கை இளைஞர்க்கு இந்தியாவில் பயிற்சி

( நமது அலுவலக நிருபர் கு. வி. மகாலிங்கம் )

யாழ்ப்பாணம் சனி

இலங்கைகாந்திசேவா சங்கம் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்துறைகளில் இந்தியாவில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள சர்வோதய நிறுவனங்களின் உதவியுடன் இந்தப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது

நெசவுத்துறை பருத்திச் செய்கை பனைத் தொழில் தேனீவளர்ப்பு சமூகசேவை இயற்கை வைத்திய ஆகிய துறைகளில் இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படும்.

இத்துறைகளில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் உருத்திரபுரத்திலுள்ள காந்தி சேவாசங்க செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

## தனியார்துறைபென்ஷனுக்கு நிதிஅமைச்சர் குழு சிபார்சு

கோட்டை, ஞாயிறு

தனியார் துறையில் சேவை புரியும் ஊழியர்கள் அனைவருக்கும் பென்ஷன் வழங்கும் திட்டமொன்று உருவாகலாமென்று இப்பொழுது மிக நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியார்துறை ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிப்பது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதியமைச்சரால் நியமிக்கப்பட்ட கமிட்டி இது சம்பந்தமான சிபார்சுகளை இப்பொழுது தெரிவித்திருக்கின்றது. நிதியமைச்சர் இக்கமிட்டியின் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டால் தனியார்துறையிலுள்ள ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பெரும்பயனடைவார்கள்.

இப்பொழுது தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் சேமலாப நிதி வசதிகளை மாத்திரமே பெறக்கூடியவர்களாய் இருந்துவருகிறார்கள்.

சேமலாபநிதி சேமிபுகளை பென்ஷன் திட்டத்தின் கீழ் கொண்டுவரலாமென்றும் மேற்படி கமிட்டி சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

# சுன்னாகம் மயான கொலைவழக்கில் எதிரி விடுதலை; சாட்சிமீது வழக்கு

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம்மயானக்கொலை வழக்கு விசாரணைநடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் சாட்சியமளித்த தருமலிங்கம்மீதுபொய்சாட்சியமளித்ததாக குற்றம்சாட்டப்பட்டு இன்று காலை விசாரணை நடைபெறும் இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்டில் நீதியரசர் ஓ எல். டி. கிரெஸர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 69ம் ஆண்டு மேமாதம் 27ம்திகதி தம்பு கிருஷ்ணன் என்பவர் ஸ்ரீகாந்தனைக் கொலை செய்த குற்றத்திற்காக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்சார்பில் அட்வகேட் ரி தம்பிரத்தினம், புறக்டர்களான ஆர். ஜே. செல்வரத்தினம், ரி. குணரத்தினம், ஏ. சிற்றம்பலம் ஆகியோர் ஆஜரானார்கள். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஆர். முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார்.

சாட்சியமளித்த தருமலிங்கம்நீதியரசர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார் அப்போது நீதியரசர் கூறியதாவது:- உண்மை சொல்வதாகக் கூறிக்கொண்டு கோர்ட்டில் பொய்சாட்சியமளித்ததை ஒத்துக் கொண்டதால் தண்டிக்க உரிமைஉண்டு, கீழ் கோர்ட்டிலா, சுப்பிறீம் கோர்ட்டிலோ உண்மை கூறுவதாக சத்தியப்பிரமாணம் செய்தபின் பொய்சாட்சி சொன்னதற்கு குற்றவாழியாகிறீர் இக்கோர்ட்டில் உம்மீதுகுற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடைபெறும்.

வழக்கு விசாரணையின்போது நாகமணி தங்கராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது நான் 2வது எதிரியாக இருந்தேன். விசாரணையின்பின் நான் விடுதலை செய்யப்பட்டேன். ஸ்ரீகாந்தனை தெரியாது. எதிரியை 7மாதமாகத் தெரியும். ஸ்ரீகாந்தனை ஒருதடவையும் சந்திக்கவில்லை கிருஷ்ண கபேக்கு குண்டெறிந்தது தெரியாது நான் இந்தக் கோர்ட்டில் கதைக்க முயற்சித்தேன் எதிரியுடன்என்னைக்கதைக்க விடவில்லைநான் போய்விட்டேன்.

நீதியரசர்:- கீழ் கோர்ட்டில் நீரும் குற்றம்சாட்டப்பட்டீர்?- ஆம்.

நீதி:-கோர்ட்டிற்குவருமுன் பொலிசார்கைதுசெய்தனர்.

நீதி:- பொலிசாருக்கு முறைப்பாடு கொடுக்கவில்லையா?- இல்லை.

நீதி:- ஒன்றும்கேட்கவில்லையா? கேட்டனர் தெரியாதென்று சொன்னேன். எனக்கும் எதிரிக்கும் அடித்தார்கள் வீட்டில் வைத்திருந்து 3நாள் அடித்தார்கள். சம்பவம்பற்றி சொல்லும்படி கூறினார்கள். 3ம்நாள் நீதவானுக்கு வாக்குமூலம் அளிக்காவிடில் தொடர்ந்து அடிப்போம் என்றனர் நீதவானுக்கு சொல்வதாக கூறினேன்.

நீதி.-பொலிசார் சம்பவம் பற்றி உமக்கு தெரியுமென நினைத்தார்கள்?-ஆம் நீதவானுக்கு, ஸ்ரீகாந்தன் அடித்துக்கொன்றதாக கூறும்படி சொன்னார்கள்.

நீதி:-பொலிசார் சொல்லித்தந்ததைச் சொன்னீர்?-அடித்ததால் சொன்னேன்.

நீதி:- நீதவானுக்குஎப்படி சொல்ல வேணுமெனபொலிசார் சொல்லித்தந்தார்களா?-ஆம்

நீதி:-சம்பவத்தைப் பற்றி ஒன்றுமே உமக்குதெரியாது?-ஆம்.

நீதி:சத்தியப் பிரமாணம் எடுத்து கூறுகிறீர்?-ஆம்.

நான் விடுதலையானபின் 1-ம் எதிரியைச் சந்திக்கச் சிறைச்சாலைக்கு ஒருதடவை சென்றேன்.

சின்னையா தருமலிங்கம் கூறியதாவது:- எதிரியைத் தெரியும் தங்கராசாவையும் தெரியும் அவருடன்சிநேகிதமில்லை. ஜூன்மாதம் இளிநொச்சிபஸ் நிலையத்தில் எதிரியைக் கண்டேன் எனது சுகத்தை விசாரித்தார். அன்றிரவு எங்களுக்குள் முன்பிருந்த உறவுகள் பற்றிபேசினோம். ஸ்ரீகாந்தனைத் தெரியும். அன்று ஸ்ரீகாந்தனைப் பற்றி நாங்கள் கதைக்கவில்லை.

வழ:-சுன்னாகம் மயானத்தில் நடந்ததுபற்றி எதிரி கூறினாரா? -அன்று இரவு சொன்னார் கொலைசம்பந்தமாக தன்னை தேடுவதாகவும் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் கூறினார். கடையில்நின்ற பெடியனின் கொலைபற்றி தன்னை அநியாமாக தேடுவதாகவும் கூறினார்.

( 4-ம் பக்கம் பார்க்க

## சிறுமி நாகேஸ்வரி மரணத்தின் எதிரொலி

# கிளனர் ஒழுங்கை பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றம்

நல்லூர், சனி

சிறுமி நாகேஸ்வரி கிணற்றுள் இறந்துகிடக்கக்காணப்பட்ட வண்ணார்பண்ணைகிலனர் ஒழுங்கைப் பாடசாலையின்தலைமைஆசிரியரும் அப்பாடசாலையின் ஆசிரியையும் மற்றோர் ஆசிரியருமாக மொத்தம் மூன்று பேரும் அப்பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த இடமாற்ற உத்தரவுகளை வடபகுதி வித்தியாதிபதி திரு வி. சங்கரலிங்கம் நேற்றுப் பிறப்பித்தார்.

நாகேஸ்வரியின் மரணத்தைத் தொடர்ந்து பாடசாலைக்குப் பிள்ளைகள்போகாமலிருந்துவந்தனர். சிறுமியின் மரணம் சம்பந்தமாகத்தாங்கள் தொடர்ந்து புலன்விசாரணை செய்வதற்கு அப்பாடசாலையின் ஆசிரியர்கள் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டால் சுலபமாகஇருக்குமெனப் பொலிசார் கல்வி இலாகாவைக் கேட்டிருந்தனர்.

மூன்று ஆசிரியர்களுக்கும் இடமாற்ற உத்தரவு வழங்கிய வடபகுதி வித்தியாதிபதி பாடசாலையை 8ந்திகதி வரை மூடும்படியும் உத்தரவிட்டிருக்கிறார். 9-ந் திகதி பாடசாலை தொடங்கும் போது புதிய தலைமை ஆசிரியரும் மற்றும் இருவரும் பாடசாலையைப் பொறுப்பேற்பர்.

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை வட்டுக்கோட்டை சிவன்கோவில் முன்றலில் சங்கீதக்கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை தலைமையில் சங்கீத பூஷணம் அ. சுகிர்தகுணசீலனின் இசை அரங்கேற்றம் நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பற்றெறி சாச்சர் சாச் செய்வதற்கும் திருத்துவதற்கும் கடைக்குத் தேவையான முழு ஆயுதங்களும் விற்பனைக்குண்டு. டைன மோட்டா வேக்ஸ், நம். 13, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 2987

G. C. E. O/L மாணவர்கட்கு ஓர் அரிய சந்தர்ப்பம் தமிழ்மொழித் தேர்ச்சிப் பயிற்சி பகுதி I, 10 வினாத்தாள் கொண்டது. வித்துவான் பொன். அ. கனகசபை எழுதியது. விலை: ரூபா 1/80. சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 2992

தளபாடம்:
மிக நல்ல நிலையிலுள்ள முதிரையில் செய்த 8 பகுதி கொண்ட வரவேற்பு அறைத் தளபாடங்களும், கண்ணாடி அலுமாரியும் (Ward robe) உடன் விற்பனைக்குண்டு. 32, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2994

கிளிநொச்சி 3-ம் வாய்க்கால் கென்னடி வீதியில் 24 ஏக்கர் நீர்ப்பாய்ச்சலமைந்த நெற்காணி 2 அறைக் கல் வீட்டுடன் விற்பனைக்குண்டு. வி. வேலாயுதம், தபால் நிலையம், உடுவில். 2995

### நன்றி நவிலல்

செப்டம்பர் 24-ந் திகதி காலமாகிய ஊரெழு சோதிடர் சிவஞான ஐயரின் மனைவியும், எங்கள் தாயாருமாகிய ஸ்ரீமதி சொர்ணம்மாவின் அந்திமக் கிரியையில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றி. சிவஞானஐயரும் பிள்ளைகளும், ஊரெழு. 2990

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

தாவடி. வெள்ளி

சோண்டாவில்கிழக்கு சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் அண்மையில் திரு. பொ. சபாலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. பொ. சபாலிங்கம், உபதலைவர்கள் திரு. நா. குலசேகரம், திரு. க. சத்தியானந்தமூர்த்தி. செயலாளர்கள் திரு. நா. துரைராஜசேகரம், திரு. சு. சுந்தரலிங்கம், தனதிகாரி திரு. ப. ஜெனார்த்தசிங்கம், உபதனதிகாரி திரு. அ. மகேந்திர

## அறிவித்தல்

### அசைவற்ற ஆதனங்களின் விற்பனவு

திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கும் வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தருவது யாதெனில், இன்றிலிருந்து ஒருமாத கால எல்லைக்குள் 1966-ஆம் ஆண்டு முடியும் வரையுள்ள சோலைவரிகளைச் செலுத்தத் தவறியவர்களின் அசைவற்ற ஆதனங்கள் யாவும் சட்டத்திற்கமையப் பறிமுதல் செய்யப்பெற்று, பகிரங்க ஏலத்தில் விற்பனவு செய்யப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றது.

ஆகவே இவ்வறிவித்தல் கிடைத்த மாத்திரத்தில், வரிகளைச் செலுத்துமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சி. சிவானந்தம்,
தலைவர்,
நகராண்மைக்கழகம்,
திருக்கோணமலை.

நகராண்மைக் கழகப் பணிமனை,
திருக்கோணமலை,
30-9-70. 2483

## இடமாற்றம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு மு. தம்பிஐயா இம்மாதம் தொடக்கம் டங்கல் தமிழ்க்கலவன் பாடசாலையில் இருந்து சுழிபுரம் திருவடிநிலை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

தாவடி, வெள்ளி

கோண்டாவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. சி. இரத்தினசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. பொ. பஞ்சலிங்கம், உபதலைவர்கள் திரு பொ சபாலிங்கம், திரு. வே. அப்பையா, திரு. இ. பாலசுந்தரம். செயலாளர் திரு. நா துரைராஜசேகரம். உபசெயலாளர் திரு. த. குமாரசாமி. பொருளாளர் திரு. சு. சுந்தரலிங்கம், உபபொருளாளர் திரு. க. வைரவநாதன் கணக்குப் பரிசோதகர் திரு. வி. தவராஜசிங்கம்.

ராசா

9 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது.

# 'பசிக்கு எதிராக போராடுவோம்!'

தாவடி, வெள்ளி

''ஈழத்தவர்கள் அனைவரும் பொருளாதார விடுதலை காண, தொழில் வளம் காண, வறுமை போக்க, வருங்காலம் சிறப்புற, தம் மொழிக் கல்வி பெற வழி கண்டுவிட்டோம் ஸ்ரீமாவோவும் அவரது அரசாங்கத் தரப்பினர்களும் எங்களை ஆதரிக்கின்றார்கள். நாமும் ஆதரவு கொடுக்கின்றோம்''

இவ்வாறு ''நாம் இலங்கையர் இயக்கம்'' விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியில் இவ் இயக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் செயலாற்றும் என்று தெரிவித்துள்ளது

''நாம் இலங்கையர் இயக்கம்'' ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்குமுகமாக வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்திருப்பதாவது;

''இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தன்னிறைவு பெறுதவரையில் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளாதவரையில் ஒவ்வொரு குடும்பமும் குடியிருக்க வீடும் மூன்று வேளை உணவும் அணிய ஆடையும் கிடைக்காத வரையில் எல்லாச் சிறார்களும் ஒரே வித சுகத்தை அனுபவித்துக் கல்வி பெற்றுக்கொள்ளாத வரையில் வாய்த் தந்திர, விடுதலை, சுதந்திரம், தனி அரசு என்ற மந்திரங்கள் வானை நிறைக்கும் என்பதனை உணர்ந்துகொண்டோம்!''

''ஈழத்தில் உள்ள எல்லா இனங்களும் ஒன்றுபட்டு ஒரே முகமாகப் பசிக்கு எதிராகவும் பருத்தி ஆடைக்கு ஆதரவாகவும் போராடாத வரையில் நாட்டில் விடுதலை இல்லை. நாட்டவர்களுக்குச் சுதந்திரமில்லை எனத் தெரிந்து கொண்டோம்.''


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
பாகப்பிரிவினை

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
என்.ரி. ராமராவ்-ஜெயலலிதா
நடித்த
விடாக் கொடாக் கண்டன்

MANOHARA
Jaffna
Daily 4 Shows

IT'S A MAD, MAD, MAD, MAD WORLD

(Scope-color)

REGAL
Jaffna


## ஸ்கந்தவரோதயா வெற்றி

உடுவில், வெள்ளி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷடிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் முதல் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டி வெற்றியீட்டியது. இரண்டாம்பிரிவு ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் பிரிவு ஆட்டத்தில் ஸ்கந்தா 2 1 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டுக்கொண்டன.

## வி. வி. உத்தியோகஸ்தர் சங்கம்

முசலி, வெள்ளி

வடமாகாண விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் எம். கணபதிப்பிள்ளை, உபதலைவர் ஜே. சலமோன், செயலாளர் பி பொன்னம்பலம், துணைச் செயலாளர் பி. கே. வேலாயுதபிள்ளை, பொருளாளர் ஆர். காசிநாதன்.


விற்பனையாகிறது!

புதிய கணிதப் பயிற்சிகள்

மூன்றும் பருவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மத்திய கல்லூரி வர்த்தக கல்வி பொன்விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ். மத்திய கல்லூரி வர்த்தகக் கல்விப் பொன்விழா இம்மாதம் 5-ம் திகதி நடைபெறும். யாழ் மத்திய கல்லூரி சதுக்கத்தில் 5-ம் திகதி மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் பொன்விழாவில், வர்த்தகக் கல்விப் பகுதியில் முதல் ஆசிரியராக பணியாற்றிய கலைப்புலவர் க. நவரத்தினத்தின் படத்தை திரு. கே. ஸி. தங்கராசா திரைநீக்கம் செய்து வைப்பார்.

தொழில் நுட்பப் பகுதி துணைக் கல்வி மா அதிகாரி கலாநிதி எஸ். எல். டி. சில்வா, வடமாநிலக் கல்வி அதிபதி திரு. வி சங்கரலிங்கம், திரு. சி. ஏ. எம். கெக்குலாவல ஆகியோர் விசேட சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

திருமதி மகேஸ்வரிதேவி நவரத்தினம் பரிசில்கள் வழங்குவார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 3—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 விட்டுடாக்டர், 7-00 வாத்தியஇசை, 7-15 சித்திரம், 7-45 இவ்வாரபிரமுகர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

......

## தெல்லிப்பழை யூனியன் வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

கொக்குவில் இந்துக்கல்லூரியுடன் மோதிய சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றியீட்டியது.

மேற்படி கல்லூரிகளின் 2-ம் பிரிவுகளுக்கிடையில் யூனியன் கல்லூரிமைதானத்தில் நடந்த உதைபந்தாட்ட போட்டியில் யூனியன் கல்லூரி 3 — 1 கோலால்வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு திரு.எஸ் சிவலிங்கம் நடுவராக இருந்தார்.

3-ம் பிரிவுகளுக்கிடையில் நடந்த போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 2கோல் போட்டதால் விளையாட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டிக்கு திரு எஸ். கிருஷ்ணர் நடுவராக கடமையாற்றினர்.

## கூடிய வெற்றிபெற்றனர்

உடுப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கை கனிஷ்ட பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட தேவரயாளி இந்துக் கல்லூரி மாணவர்கள் அதிக போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

வீ திருச்செல்வம், எஸ் இராஜசேகரன், பொ. பாலச்சந்திரன், வீ. ரூபானந்தன் ஆகிய நால்வரும் 4 போட்டிகளிலும் இரண்டாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

## இன்றைய பலன்


புரட்டாதிமாதம்17-ம்திகதி (3-10-70)

மேஷம்— குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும், பிரம்மச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்பும் நல்லநாள்.

ரிஷபம்— சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரைச் சொக்கவைப்பீர்கள் இன்று மிகவும் குஷியாக இருப்பீர். சொகுசான நாள்.

மிதுனம்— தெய்வபக்தி

## 39 வருட ஆசிரிய சேவை



வலி. மேற்கு தமிழாசிரியர் சங்க தலைவர் திரு. அ நல்லதம்பி இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1931 ம் ஆண்டிலிருநது இருவருடங்கள் உதவி ஆசிரியராய் இருந்து 1933-ம் ஆண்டு காரைநகர் இலகடி சைவத்தமிழ்ப் பாடசாலையில் தலைமை ஆசிரியராய் நியமனம் பெற்ற, இவர் முப்பத்தேழு வருடங்களாய் தொடர்ந்தும் அப்பதவியில் கடமையாற்றி வந்தவராவர்.

இவரின் ஆசிரியப்பணி யாவராலும் பாராட்டற்குரியதே மாணவர் ஆசிரியர் அனைவரதும் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றவர். இலகடிப் பாடசாலைக் கட்டிடத்தின் அழகுமிகு தோற்றத்தின் முழுமுதற் காரணகர்த்தா இவரேயாவார். இவரையும், இவரது சேவையையும் காரைநகர் இலகடி சைவத்தமிழ்ப்பாடசாலை என்றென்றும் மறந்துவிடமுடியாது.

இவர் வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்கத்தில் பல்லாண்டுகளாகத் தலைவர் பதவியைத் தாங்கி வந்துள்ளார். ஆசிரியர்களிடையே அன்னியோன்யமாகப் பழகும் சுபாவம் கொண்ட இவர், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவற்றின் உபதலைவராகவும், வடமாகாண ஆசிரிய சகாயநிதிச் சங்கத் தலைவராகவும் இருந்துவருகின்றார். 1943-ம் ஆண்டு தொடக்கம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் அதிகாரசபை அங்கத்தவராய் கடமையாற்றுவதுடன், உபதலைவர் காரியதரிசி, தனதிகாரி போன்ற பொறுப்புமிக்க பதவிகளையும் வகித்துவந்துள்ளார்.

நல்ல யோசனையைக் கேட்கவேண்டுமானல் நல்லதம்பி ஆசிரியரை நாடுவோமே என்று நாடியவர்கள் பலர் ஆசிரியையான இவரது துணைவியார் தனது கணவனின் அருந்தொண்டின் பக்கபலத் துணைவியாகவும் உழைக்கின்றமையாலேயே இவர்கள் தொண்டு நற்பணியாகின்றது.

முப்பத்தொன்பது வருட ஆசிரிய சேவையைப் பழுதறப்புரிந்து நாட்டுக்கு நல்லதைச் செய்து முடித்தேன் என்ற மகிழ்ச்சியின் நிறைவுடன் 1-10-70-ல் இளைப்பாறுதலைப் பெறும் ஆசிரியர் உடல் உறுதியுடன் மனைவி, மக்கள், சுற்றத்தாரோடு இன்னும் பல்லாண்டு தொண்டுபல செய்து வாழ வேண்டும் என வாழ்த்தி இறைவனை வேண்டுகின்றோம்.

— பழையமாணவன்.

## ஸ்ரீகணேசா வெற்றி

யாழ்ப்பாணம், சனி

தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட 'தாச்சி' சுற்றுப் போட்டியில் மீசாலை ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் முதலாம்இடத்தைப் பெற்றது. இச்சுற்றுப் போட்டி மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி.)

## வயாவிளான் ம.ம. வித்தியாலய நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், சனி

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து

## விசாரணை மேற்கொள்ள உத்தரவு

யாழ்ப்பாணம், சனி

நற்சான்றுப் பத்திரம் வழங்குவதில் அரசியல் பாகுபாடு காட்டி அதில் 'ஒழுக்கம்' என்ற பகுதியை நிரப்ப மறுத்ததாக அனலைதீவு கிராம சேவையாளருக்கு எதிராக அதேயூரைச் சேர்ந்த ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட புகார் சம்பந்தமாக உடனடி விசா

நா. குலசேகரம், திரு. சு சத்தியானந்தமூர்த்தி. செயலாளர்கள் திரு. நா. துரைராஜசேகரம், திரு. சு சுந்தரலிங்கம். ஜுனதிகாரி திரு. ப. ஜெஞர்த்தசிங்கம். உப ஜுனதிகாரி திரு அ. மகேந்திர

பரிசோதகர் திரு. வி. தவராஜசிங்கம்.

ராசா

9 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

கண்ணன் - ராதிகா தேங்காய் சீனிவாசன் நடித்த

ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்


ஜெமினி—பத்மினி—நாகேஷ் ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த

எதிர்காலம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்நகர் (2-30, 6-30, 9-30)

தாய்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம். உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

துலாபாரம்

(தமிழ்)

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனுதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனு, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)



MAD, MAD WORLD

(Scope-color)

REGAL Jaffna

Daily: 4-45, 7 & 9-45 p.m.

Robert Mitchum in BATTLE FOR ANZIO (War Film)



விற்பனையாகிறது!

புதிய கணிதப் பயிற்சிகள்

எட்டாம் வகுப்பு

மூன்றும் பருவம்

விலை ரூபா: 2-00

கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம் — கண்டி 2482



வண்ணப்பட ஒளிப்பதிவிலும்; எண்ணப்படியான காட்சி அமைப்பிலும் சிறந்த பாடல்களுக்கும் பரிசுபெற்ற படம்

யாழ். வின்ஸர் திரையில்


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★ காஞ்சனு

★ நாகேஷ் ★ மஞ்சுளா

நடித்த



ஜெம் மூவீஸ்

சாந்தி நிலையம்

டைரக்ஷன்-G.S.மணி B.Sc., • ஈஸ்ட்மென் கலர்-ஜெமினி

உங்கள் குழந்தைச் செல்வங்களுடன் பார்த்து மகிழவேண்டிய படம்.


நல்லநாள்.

ரிஷபம்- சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரைச் சொக்கவைப்பீர்கள் இன்று மிகவும் குஷியாக இருப்பீர். சொகுசான நாள்.

மிதுனம்- தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பும் கிடைக்கும், சுமுகமான நாள்.

கடகம்- பதவியில் உயர்வு கண்டு பண்புடன் வாழ்வீர் இன்று. தனத்துடன் நண்பர் சேர்க்கை தவருது கிடைக்கும்.

சிம்மம்- பொருள்வரவு உபசாரம் பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாக மூட்டும் செய்தியும் அவசியம் கிடைக்கும்,

கன்னி- பொருள்முடை தென்படும். கடன் பட நேரிடும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம்.

துலாம்- நாள் எல்லாம் அலைச்சல் உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தை பேணுக.

விருட்சிகம்- துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளைப் பெருகவைக்கும். தள்ளிவைத்த மக்கள் எல்லாம் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

தனுசு- நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். நெடும்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்.

மகரம்- வாகன சுகத்துடன் வாழ்க்கைநலன் வந்து சேரும். தாய்வழித் தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

கும்பம்- வானம்பாடி போல் கானம் இசைப்பீர். வாழ்விலும் ஒளிவீசும். முதியவர் ஒருவர் உமக்கு நல் வழிகாட்டுவர்.

மீனம்- எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர். ஏக்கத்தின் சாயல உண்டு. ஆத்திரத்தை அடக்கினுல் அமைதிக்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், சனி

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முதலாம் நாள் பூசை உப அதிபர் திரு. சி. ஆறுமுகம் தலைமையில் இரசிகமணி கனக செந்திநாதனின் சொற்பொழிவுடன் நடைபெற்றது. ஆசிரியர் திரு க. அருணுசலம் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் விழாவில் திரு க. சொக்கலிங்கத்தின் சொற்பொழிவு இடம்பெற்றது

ஆசிரியர் திரு, சி. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இன்றைய பூசையில் செல்வி எம். செல்லத்துரையின் இன்னிசை விருந்தும் இடம்பெறுகின்றது.

நாளையிலிருந்து 10-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இவ்விழாவில் இடம்பெறும் நிகழ்ச்சிகளின் விபரம்-;

4-10-70: தலைவர் ஆசிரியர் திரு. வி. கந்தவனம், சொற்பொழிவு திருமதி வள்ளிநாயகி . இராமலிங்கம் (குறமகள்)

5 ம் திகதி: தலைவர் திரு. சி. ஆறுமுகம், சொற்பொழிவு அருட்கவி சி. விஞசித்தம்பி,

6-ம், 7-ம் திகதிகள் விடுதி மாணவர் கூட்டுப் பிரார்த்தனை.

8-ம் திகதி தலைவர் ஆசிரியர் திரு சி. சனகசுந்தரம், சொற்பொழிவு வித்துவான் சைவப்புலவர் க கணபதிப்பிள்ளை.

9-ம் திகதி தலைவர் சங்கீத பூஷணம் அல்வின் தேவசகாயம், கூட்டுப்பாடல், பேச்சு செல்வன் பொ. சேதுராமலிங்கம். பண்ணிசை, பேச்சு செல்வி ஆ செல்லம்மா, தோத்திரப் பாடல்கள், பேச்சு செல்வி ஆ ஜெகதீஸ்வரி, பண்ணிசை, தேவாரம்.

இறுதித்தினமான 10-ம் திகதி பக்திப்பாடல்கள் திரு ஆர், துரைசாமி, ஏடு தொடங்கல் ஆசிரியர் அருணுசலம்

கம்' என்ற பகுதியை நிரப்ப மறுத்ததாக அனலைதீவு கிராம சேவையாளருக்கு எதிராக அதேயூரைச் சேர்ந்த ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட புகார் சம்பந்தமாக உடனடி விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தபால், தந்தி அமைச்சர் திரு, செ. குமாரசூரியர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு இம்மாதம் 24-ம் திகதி அனுப்பிவைத்துள்ள அவசர கடித மூலம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான புகாரை குறிப்பிட்ட நபர் பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கும், தபால்தந்தி அமைச்சருக்கும் இம்மாதம் 13-ம் திகதி அனுப்பியிருந்தார்.

— —

## திருமறைவிழா

முசலி, வெள்ளி

நாஞட்டான் பங்கு குருவானவரின்கீழுள்ள பொற்தீவுகண்டல் நாஞட்டான், அளவக்கை, அச்சம்குளம், பள்ளங்கோட்டை, பெரிய கட்டைக்காடு ஆகிய கிராமங்களைக்கொண்ட ஒரு திருமறைவிழா. நாஞட்டானில் இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கின்றது இதற்கான ஆயத்தங்களை நாஞட்டான் பகுதிப்பங்குக் குரவர் வண பிதா திரு தோமஸ் சவுந்தரநாயகம் செய்துவருகிருர்.

— —

## நடவடிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த வருடம் இடமின்மையால் பல்கலைக் கழகப் பிரவேசம் மறுக்கப்பட்ட 35 தமிழ் முஸ்லிம் கலைப் பகுதி மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய அவசியமிராது பிரவேசம் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இம் மாணவர் சங்கச் செயலாளர் திரு நா. நடேசன் தெரிவித்தார்.


உத்தரவாதமுள்ள தங்க - வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள

நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்

எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள் — வைர வியாபாரிகள்

கன்னுதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்புக்குள்ளான அரபுப் பகுதிகளை விடுவிப்பதற்கு சங்கற்பம்

## நாஸர் வழியில் செயல்பட அரபுத்தலைவர்கள் தீர்மானம்

கெய்ரோ. அக் 2

இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களை விடுவிப்பதற்காக தொடர்ந்து போராடுவதென்று கெய்ரோவில் அதிபர் நாஸரின் நல்லடக்கத்தின் பின்னர் கூடிய அரபுத் தலைவர்கள் உறுதிபூண்டனர்.

அரபுப் பிரதேசங்களை மீட்பதற்காகவும், பாலஸ்தீன மக்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்காகவும் தொடர்ந்து கூட்டாக முயற்சி எடுப்பதென்று அவர்கள் உறுதி செய்தனர்.

காலனி ஆதிக்கத்தையும் ஜெய்னிஸத்தையும் தொடர்ந்து எதிர்ப்பதென்றும் அவர்கள் முடிவுசெய்தனர்.

சூடான் அதிபர் நிமேரியின் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் அரபுத் தலைவர்கள், அதிபர் நாஸரின் மறைவுக்குப் பின்னர் தங்கள்மேல் விழுந்திருக்கும் பொறுப்புகள் பற்றி ஆலோசனைகள் நடத்தினர்கள். இஸ்ரேலியரை எதிர்த்துப் போராடுவதில் ஒன்றுபட்டு நிற்பதென்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

### துணை அதிபர் மயக்கமுற்றார்

அதிபர் நாஸரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எகிப்தின் முன்னாள் துணை அதிபரும் இப்போது தற்காலிக அதிபராக இருப்பவருமான திரு. அன்வர் சதாத் மாரடைப்புக்குள்ளானார்.

முன்னாள் பிரதம மந்திரி திரு. அலிசாப்ரியும் இவ்வாறு மாரடைபபினால் கஷ்டமுற்றார். அதிபர் மரணத்தினால் ஏற்பட்ட கவலையும் களைப்பும் இந்த மாரடைப்புக்குக் காரணம் என்று டாக்டர்கள் கூறினார்கள். இருவருமே சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நாஸருக்குப்பின்னர் எகிப்திய ஜனாதிபதியாக இந்த இருவரில் ஒருவரே தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாஸர் மரணமானதிலிருந்து 60 நாட்களுக்கு திரு. சதாத் தற்காலிக அதிபராக இருப்பார். இந்த இடைக்காலத்தில் சட்டசபை கூடி புதிய அதிபராக ஒருவரை நியமிக்கும். மாஸ்கோ ஆதரவாளராகக் கருதப்படும் திரு. அலி சாப்ரியே இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கொஸிஜின் வாக்குறுதி

அதிபர் நாஸர் மறைந்துபோனாலும், ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவிகளைக் கொடுத்துவரும் என்று ரஷ்யப் பிரதம மந்திரி திரு; கொஸிஜின் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு வாக்குறுதியளித்திருக்கிறார். நாஸரின்இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக கெய்ரோவுக்கு வந்திருந்த ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் கெய்ரோ வானொலியில் உரை நிகழ்த்தினார்.

### அம்மானில் அமைதி ஒப்பந்தம்

ஜோர்டானில்அமைதியை ஏற்படுத்துவதற்காக ஜோர்டான் ராணுவ அதிகாரிகளும் கொமாண்டோக்களும் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளார்கள். அதேசமயம் அம்மான் வீதிகளிலிருந்து இப்பொழுது ராணுவத்தினரும் கொமாண்டோக்களும் விலகிக்கொண்டுள்ளார்கள். அம்மான் நகருக்கு சுமார்மூன்று மைல் தொலைவுக்கு ராணுவத்தினர் வாபஸாவதென்றும், கொமாண்டோக்கள் தமது நடவடிக்கைகளுக்கு வசதியான பகுதிகளுக்கு வாபஸாவது என்றும் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளனர். அம்மான் நகர் இனி முற்றிலும் பொலிசாரின் பொறுப்பில் இருக்கும்

கடந்தமாதம் யு. எஸ். போயிங் விமானமொன்றைத்திசைதிருப்பிகெய்ரோ விமான நிலையத்தில் வெடிவைத்துக் கொளுத்தப்பட்டதற்குப் பொறுப்பாக இருந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

---

காந்தி ஜயந்தியை

# பல்வேறு முறைகளில் கொண்டாடினர்

புதுடில்லி, அக். 2

இன்று பாரத மக்கள் மகாத்மாவின் பிறந்ததினத்தை பக்திபூர்வமாகக் கொண்டாடினார்கள். பல்வேறு இடங்களிலும் பஜனைகளும், வழிபாடுகளும் இடம்பெற்றன. ராஜ்யத் தலைநகர்களில் காந்திஜயந்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மகாராஷ்டிர அரசாங்கம் காந்தி ஜயந்தி தினத்தை வேலைநாளாக அறிவித்திருக்கிறது. மகான்கள்தம் பிறந்த தினத்தை மக்கள் வீணாக்குவதை விரும்புவதில்லை. அவர்கள் அன்றையதினத்தில் வேலை செய்வதின் மூலமே அவர்களுக்கு உண்மையான முறையில் அஞ்சலி செலுத்த முடியும் என்று மகாராஷ்டிர அரசு அறிவித்திருக்கின்றது.

நாகலாந்து அரசாங்கம் காந்தி ஜயந்தியை மதுவிலக்குத் தினமாக அனுஷ்டிக்கின்றது.

குஜராத் அரசாங்கம் அதிகப்படியாகவுள்ள நிலங்களை நிலமில்லாதவர்களுக்குபகிர்ந்தளிக்கும் தினமாக அனுஷ்டிககின்றது. மத்திம பிரதேசத்தில் பலகிராமங்களுக்கு இன்று முதன் முதல் மின்சாரம் வழங்கப்படுகின்றது.

---

## சங்கராச்சாரியார் கருத்து: கருணாநிதி விளக்கம்

சென்னை, ஒக். 2

'ஸ்ரீசங்கராச்சாரியார் சொன்னதாக நான் கேள்விப்பட்டதைத்தான் சொன்னேன் இந்து மதத்தில் உள்ள கடவுள் நம்பிக்கை விக்கிரக ஆராதனை ஆகியவை எனக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், நான் தலைமை ஏற்றிருக்கும் இந்த அரசைப் பொறுத்த அளவில் எந்த நம்பிக்கையாளர்கள் மனமும் புண்படாத நிலையில்தான் நடக்க வேண்டும் எனக் கருதுகிறேன். அந்த முறையில் தான் இந்த அரசும் நடைபெற்று வருகிறது'.

இவ்வாறு, தமிழக முதலமைச்சர் திரு மு. கருணாநிதி காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள் தியாகராய நகர் பிள்ளையார் பிரச்னை சம்பந்தமாக தம்மை எவரும் அணுகி கருத்து கேட்கவில்லை என மறுத்துள்ளதைத் தொடர்ந்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் மேலும் கூறியதாவது: [illegible] கட்டுவதற்காக இந்துக்களும், முஸ்லீம்களும் கலெக்டர் தலைமையில் கூடி ஒரு இடத்தை சமரசமான முறையில் [illegible] ஒப்புக்கொண்டபிறகு, அதை [illegible]டுக்கும் முறையில் ... என விரும்புகிற பெரியர்கள் உணர்ந்தால் நல்லது. அடையாறு பகுதியில் ஒரு பிள்ளையார் சிலை காணமல் போனதாக பொலிஸுக்குப் புகார் வந்துள்ளது. அந்தப் புகார் உண்மை என்று தெரிந்தால் அதை அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டியது தான். காணமல் போன பொருள் கண்டுபிடிக்கப்பட்டால் உரியவர்களிடம் சேர்ப்பதுதான் முறை.

---

### பிரிட்டனில் இலங்கையர்

லண்டன், அக் 2

தற்சமயம் பிரிட்டனில் நடைபெற்று வரும் கணக்கியல் பயிற்சி வகுப்புகளில் இலங்கை உட்பட 20 நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட கணக்காளர்களும் கணக்காய்வாளர்களும்பற்குபற்றி வருகிறார்கள். பிரிட்டிஷ் கவுன்சில் ஒழுங்குசெய்துள்ள இந்தப் பயிற்சி வகுப்புகள் டிசம்பர் 18-ம் திகதியுடன் முடிவடைகிறது.

இலங்கை சார்பில் தி[illegible] நாச்சிமுத்து இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி வருகிறார். இவர் கொழும்பி[illegible] இல்[illegible] கணக்காய்வாளர் இலாகாவில் கணக்காய்[illegible] சுப்பிரிண்டனாக கட[illegible]

---

### சவ ஊர்வலத்தில் பஸ்மோதியது 2 பேர் பலி

பாண்டிச்சேரி, அக். 2

புதுவைக்கு அருகிலுள்ள முருங்க பாக்கத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த சவ ஊர்வலத்தின் மீது பஸ் மோதியதால் இருவர் மரணமடைந்தனர்.

பாண்டிச்சேரியிலிருந்து கடலூருக்குச் சென்றுகொண்டிருந்தபஸ்திடீரென 'பிரேக்' பிடிக்க முடியாததினால் இவ்விபத்து ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த கூட்டத்தினர் பஸ்டிரைவரைத் தாக்கியதுடன் பஸ்ஸையும் தீயிட்டுக் கொளுத்தினர். பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் விரைந்து நிலைமையைச்சமாளித்தனர்.

---

### வீரசைவர் நரிக்குறவப் பெண்ணை மணந்தார்

சென்னை, அக். 2

வீர சைவக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நரிக்குறவப் பெண்ணை மணந்தார் இந்த நரிக்குறவப்பெண் பொன்னேரிதாலுக்கா சோழாவரம் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தவராவார். போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்ட ஞானசுந்தரி என்னும் இந் நரிக்குறவப்பெண் தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத் தலைவர் 10-ம் வகுப்புவரை படித்துள்ளார். கஸ்தூரிபாய் மாணவிகள் இல்லத்தில் மேற்றனாய் பணியாற்றியவர். இவரை மணந்தவரின் பெயர் ஸ்ரீ ரகுபதியாகும்.

---

### உடுப்பிட்டியில் அனுதாபம்

உடுப்பிட்டி, வெள்ளி

'தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் அரபு மக்களின் நல்வாழ்விற்கான போராட்டங்களில் இவ்வளவு காலமும் தலைமை தாங்கிவந்தஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் திரு. நாஸரின் மரணம் எதிர்பாராத பேரிழப்பாகும். குயஸ் கால்வாய்ப் பிரச்னையில் பிரித்தானிய, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகக்கடுஞ்சமர் புரிந்து தனது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்த அதிபர் நாஸர் ஒரு தேசிய விடுதலை வீரனென்பதை எவரும் மறுக்கமுடியாது''.

இவ்வாறு உடுப்பிட்டிக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கச்சம்மேளனத்தால் எகிப்திய ஜனாதிபதி நாஸரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் வழக்கறிஞர் திரு.

---

## 'பாரபட்சம் காட்டினால் உடன் தெரிவியுங்கள்'

மாவிட்டபுரம், வெள்ளி

சிமெந்து கூட்டுத்தாபனத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதில் பாரபட்சம் காட்டினால் அதனை உடன் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்தால் தொழிலாளர் நலன் கருதி நடவடிக்கை எடுக்க மக்கள் முன்னணி அரசு தயாராகவுள்ளது.'

இவ்வாறு உதவித் தொழில் அமைச்சர் எச், எஸ். சிறிசேன சிமெந்து தொழிற்சாலை பொதுத் தொழிலாளர் யூனியன் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

மேற்படி யூனியனைச் சேர்ந்த க. கணபதிப்பிள்ளை நா நடராசா பெ. வீரசிங்கம் எஸ். விஜயசேகரா, ந. நாகராசா ஆகியோர் உதவித் தொழில் அமைச்சரைச் சந்தித்துப் பேசியபோதே உதவி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சர் நியமிப்பதாகச் சொல்லிய உபகமிட்டி இன்று வரைநியமிக்கப்படாததை இக் குழு சுட்டிக்காட்டியபோது உதவி மந்திரி இதுபற்றித் தாம் திரு சுபசிங்காவுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

கும்போட்மொடல் சிமெந்துத் தொழிற்சாலையில் தூசிகள் புகையுடன் போவதில்லையென்றும் இங்கு மணித்தியாலத்திற்கு சராசரி 3.5 தொன் சிமெந்துத் தூசி வெளியில் செல்கின்றது. இதில் அரசாங்கம் அக்கறை காட்டினால் கூடிய இலாபத்தைப் பெறலாம் எனவும்குழுவினர் உதவி அமைச்சருக்கு எடுத்துக்கூறினர்.

ஊழியர் சேமலாப நிதி கூட்டுத் தாபனத்தால் 6 மாதத்துக்கு ஒரு முறை அனுப்பப்படுவதால் தொழிலாளர் பணத்திற்கு வட்டி கிடைப்பதில்லையென்றும் கூடிய கெதியில் பெறமுடியாது இருக்கிறதென்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

முறைப்பாடுகள் பற்றி நடவடிக்கை எடுப்பதாக உதவி அமைச்சர் உறுதியளித்தார்.

---

## 'தொழிற் சங்க சரித்திரத்திற்கு மாசு ஏற்படுத்துகின்றனர்''

கோட்டை, வெள்ளி

மொழிவழித் தொழிற் சங்கங்களிலும் சாதி சமய அடிப்படையில் இயங்கும் தொழிற் சங்கங்களிலுமுள்ள தொழிலாளர் தமக்குள்ளேயே போராடி தொழிற்சங்கச் சரித்திரத்திற்கே மாசுபடுத்துகின்றனர்.

பிரித்தியங்கும்தன்மையே இந்நாட்டுத் தொழிற் சங்கங்களின் போக்காக இருப்பது வருந்தக்கூடியது. இதனால் தொழிலாளருக்கான சிறந்த வேலைத் தரத்தையும் வாழ்க்கை நிலையையும் கேட்டு முதலாளிகளுடன் போராடிப் பெறக்கூடிய சந்தர்ப்பத்தையும் பலத்தினையும் விரயஞ் செய்யவேண்டி இருக்கிறது.

இவ்வாறு அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்கத் தலைவர் திரு. வில்பிரெட் பெரேரா சங்கத்தின் பேராளர் மாநாட்டில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

ஒரு தொழிற்சங்கம் பதவியில் இருப்போரின் தயவினை மட்டும் நம்பி இருத்தல் நன்றல்லவென்றும் தொழிற்சங்கமானது தனது உறுப்பினர் பலத்திலும் ஆதரவிலும் நம்பி கொள்கை என்ற அத்திவாரத்தில் எழுப்பப்படல் வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எல். ஜி. டி. விக்கிரமசிங்க, துணைத் தலைவர் ம. குணநேசம், செயலாளர் எச். சி. வி. யோசப், துணைச் செயலாளர்கள்: மா. சேதுகாவலர், எம். பொன்னையா ஆசிரியர்கள்: போஸ்ட் மார்க் - பசில்சில்வா, க. குகதாசன், ஆ. குணபாலசிங்கம், அ. பி. குணநாயகம்.

---

"கூட்டணியினால் தான்

## அவர் லட்சியத்தை செயல்படுத்த முடியும்"

சுழிபுரம், வெள்ளி

''அந்நிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடிச்சுவட்...

"பழைய

---

# "நீதியுடன் கூடிய அமைதிக்கே போராடினர்"

## மாவீரர் நாஸருக்கு கொழும்பில் அஞ்சலி

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு குடியரசு ஸ்தானீகராலயத்துக்கு பல ஸ்தாபன பிரதிநிதிகளும், பிரமுகர்களும் ஏராளமாகவந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ... கவே அவர் பாடுபட்டார். அவர் காட்டியுள்ள வழி எங்கள் உள்ளத்தில் பதிந்துள்ளது. அதையே நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவோம்'' என்று துக்கத்தால் கண்ணீர் ததும்பக் கூறினர். அமைச்சர் பீட்டர் கெனமன் ...

### ஐ. நா. மலேஸிய தூதர் ரமணி மரணம்

கோலாலம்பூர், அக். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு குடியரசு ஸ்தானிகராலயத்துக்கு பல ஸ்தாபன பிரதிநிதிகளும், பிரமுகர்களும் ஏராளமாகவந்து அங்கு வைக்கப்பட்டிருந்த மறைந்த தலைவரின் படத்துக்கு முன்னால் அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையின் ஆபிரிக்க-ஆசிய ஒற்றுமைச் சங்கம் இலங்கை சமாதான சபை இவற்றின் சார்பாக தலைவர் வண சுமணதிச காரியதரிசி: ஏ. அஸீஸ், உபதலைவர்: ஏ ஸி. நடராசா, தனதிகாரி: டி. துரைசிங்கம் முதலியவர்கள் அங்குசென்று மறைந்த வீரரின் படத்தின் முன்பாக மலர் வளையம்வைத்து தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

ஐக்கிய அரபு குடியரசின் ஸ்தானிகர், தமது நன்றியைத் தெரிவித்துப் பேசுகையில், ''சமாதானசபை ஆபிரிக்க-ஆசிய ஒற்றுமை இயக்கம் இவற்றை தலைவர் நாஸர் பூரணமாக ஆதரித்தார். நீதியுடன் கூடிய சமாதானத்துக்காகவே அவர் பாடுபட்டார். அவர் காட்டியுள்ள வழி எங்கள் உள்ளத்தில் பதிந்துள்ளது. அதையே நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவோம்'' என்று துக்கத்தால் கண்ணீர் ததும்பக் கூறினார்.

அமைச்சர் பீட்டர் கெனமன் முதலிய பலரும் வந்து தங்கள்அஞ்சலியைச்செலுத்தினர்.

## ''இடமாற்றம் செய்யாதீர்''

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வரும் அப்போதிக்கரி திரு. என். ரி மூர்த்தியை இடமாற்றம் செய்யாது தொடர்ந்து தொல்புரம் வைத்தியசாலையிலேயே கடமையாற்ற வழி செய்யும்படி சுழிபுரம் கிராம சபையினர் வேண்டியுள்ளனர். இத் தீர்மானத்தின் பிரதிகள் தொகுதி எம். பி, சுகாதார அமைச்சர் சுகாதார அத்தியட்சகர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 'தமிழருக்கு பலனில்லை'

உடுப்பிட்டி, வெள்ளி

அரசியல் நிர்ணயசபை சட்ட ரீதியாக ஆரம்பிக்கப்படவில்லையென்றும், இதனால் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமுமில்லையென்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் டாக்டர் திரு. பூ. ஆ. விசாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மந்திரிகள்

## ராஜாஜி கருத்து

சென்னை, ஒக். 2

அடுத்த பொதுத் தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன்னர் தமிழக முதலமைச்சரும் அவருடைய சகாக்களும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு கருத்திருமன் எதிர்பார்ப்பது வீண் ஆசை என்றும் அப் பதவியிலிருந்து கொண்டு அதன் அனுகூலங்களை அனுபவிப்பவர்கள் யாரும் இதைக் கேட்கப் போவதில்லை என்றும் திரு. ராஜாஜி கருத்துத் தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் படத்தை திரை நீக்கம் செய்தார்

உடுப்பிட்டி, வெள்ளி

ஆட்சிமன்ற விவகார, விளையாட்டு அமைச்சர் திரு. கே. பி. இரத்னாயக்கா நேற்றுமாலை பருத்தித்துறைப் பகுதிக்கு விஜயம் செய்து விநாயக முதலியார் வீதியிலிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை அலுவலகத்தில் பிரதமரின் படத்தைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிப் பழைய மாணவர்சங்கத்தால் அமைச்சர் வரவேற்கப்பட்டார். ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் இராப்போசன விருந்துபசாரமும் நடைபெற்றது.

வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரிபிரிவுகளை உள்ளடக்கிய வடமராட்சி விளையாட்டுக்கழகம் வடமராட்சியில் பொது விளையாட்டரங்கொன்று நிறுவித்தருமாறு கோரும் மகஜரொன்றை விளையாட்டமைச்சரிடம் சமர்ப்பித்தது.

## ஐ. நா. மலேஷிய தூதர் ரமணி மரணம்

கோலாலம்பூர், அக். 2

திரு. ராதாகிருஷ்ண ரமணி நியூயோர்க்கில் அகால மரணமடைந்துள்ளார். இவர் மலேஸியாவின் ஐ. நா. தூதுவராவார்.

நியூயோர்க்கில் சில வருடங்களுக்கு முன்னர் திரு ரமணிக்கு சத்திர சிகிச்சை ஒன்று நடைபெற்றது. அதன் பின்னர் நன்கு குணமடைந்து வந்த ரமணி இரு தினங்களுக்குமுன் திடீரென மரணமானார், இவரது பூதவுடல் விமானமூலம் கோலாலம்பூருக்குக் கொண்டுவரப்பட்டது.

அவர் மேலும் கூறியதாவது: [illegible]ருதி கட்டுவதற்காக இந்துக்களும், முஸ்லீம்களும் கலெக்டர் தலைமையில் கூடி ஒரு இடத்தை சமரசமான முறையில் தேர்ந்தெடுத்து ஒப்புக்கொண்ட பிறகு, அதை [illegible]டுக்கும் முறையில் அங்கு திடீரென ஒரு பிள்ளையார் வந்ததாகக் கூறுவதும், அந்த அடிப்படையில் மக்களை ஏமாற்ற முயல்வதும் இந்து மதத்திற்கு அழகல்ல மதம் மக்களை ஏமாற்றுவதாக இருக்கக் கூடாது என்பதை ஆதி சங்கரரும், விவேகானந்தரும் உலகிற்கு எடுத்துச் சொல்லியுள்ளனர் வேண்டும் என்றே கற்பனையாக இந்து மதத்திற்கு களங்கம் உண்டாக்கும் வகையில் இது போன்ற காரியங்கள் நடைபெறுவது நல்லதல்ல என்பதை இந்துமதம் வளர வேண்டும்யுடன் முடிவடைகிறது.

இலங்கை சார்பில் தி[illegible] நாச்சிமுத்து இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி வருகிறார், இவர் கொழும்பிலுள்ள கணக்காய்வாளர் இலாகாவில் கணக்காய்[illegible] சுப்பிரிண்டனாக கட[illegible]யாற்றிவருகிறார்

'அரசாங்க சேவையில் நிர்வாக கணக்கியல்', 'அரசாங்க கணக்குத் துறையில் பொருளாதார அபிவிருத்தியின் தாக்கம்' போன்ற பல விவகாரங்கள்பற்றி இப்பயிற்சி வகுப்புகளின்போது ஆராயப்படும்

பிரிட்டிஷ் கவுன்சிலுடன் பிரிட்டிஷ் திறைசேரி, பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு, மத்திய தகவல் காரியாலயம், பிரிட்டிஷ் கல்வி இலாகா கூட்டாகச் சேர்ந்த இப்பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன

[illegible] கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கச்சம்மேளனத்தால் எகிப்திய ஜனாதிபதி நாஸரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் வழக்கறிஞர் திரு. சிவா பாலேந்திரன் குறிப்பிட்டார். இவ் அனுதாபக் கூட்டம் நெல்லியடியிலுள்ள கம்யூனிஸ்ட் வாலிபர்சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள் அருணகிரிராஜா, ஸ்ரீகாந்தன், வரதராஜா, செல்வரத்தினம் உட்பட வேறு பலரும் பேசினர். உடுப்பிட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளனத்தின் சார்பில் ஐக்கிய அரபுக்குடியரசு ஸ்தானிகராலயத்திற்கு அனுதாபச் செய்தியொன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அதிபர் நாஸரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து 2 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## கரவெட்டியில் பாரதி விழா

உடுப்பிட்டி, வெள்ளி

''இருபதாம் நூற்றுண்டுக்கேற்ற வகையில் கவிதைகளைப்படைத்து இலக்கிய உலகில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் பாரதி அவர் இன்று முப்பது கோடி மக்கள் கண்டுவரும் புதுமைகளை அன்று தனது தீர்க்க தரிசனத்தால் பாடல்களாக வெளியிட்டார். எல்லோரும் இந்நாட்டு மன்னரென்ற பொதுவுடைமைத்தத்துவத்தைப் பாரதியார் போதித்துள்ளார்''.

இவ்வாறு பண்டிதர் திரு. இ. க. முருகேசு கரவெட்டி தெற்கு ஆதவன் இளைஞர் மன்றத்தினரின் பாரதி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழா குமாரியா தோட்டமைதானத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. கிருஷ்ண பிள்ளை பேசுகையில் ''தமிழ் மக்கள் போலிக் கௌரவங்களில் மூழ்கிக்கிடக்கின்றனர். உண்மைக்கலைஞர்கள் மதிக்கப்படுவதில்லை சமுதாயத்தில் நிலவும் இத்தகைய சீர்கேடுகளைப் போக்கப் பாரதியார் அரும்பாடுபட்டு உழைத்தார்'' என்று சொன்னார்.

திரு சி, தியாகேஸ்வரன் திரு செ. பலசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

கலை, கதம்பநிகழ்ச்சிகளும் நாடகங்களும் இடம் பெற்றன.

# அவர் லட்சியத்தை செயல்படுத்த முடியும்''

சுழிபுரம், வெள்ளி

''அந்நிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆழ்ந்து போயிருந்த இலங்கைவாழ் மக்களைத் தட்டியெழுப்பிச் சிந்திக்கச் செய்து, வெற்றிப் பாதையில் வீறுநடை போடச்செய்த பெருமை மறைந்த பிரதமர் பண்டாரநாயக்காவையே சாரும். அன்னாரது நினைவுதினத்தைக் கொண்டாடுவதன் மூலம் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள்''

இவ்வாறு சுழிபுரம் கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியினரால் பண்டாரநாயக்கா நினைவுதினம் கொண்டாடப்பட்டபோது வாலிபர் சம்மேளனத் தலைவர் திரு. ஆ. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

''தேசிய மயம், சோஷலிஸம் என்பன போன்ற கருத்தை இடதுசாரிகள் கொண்டிருந்தபோதும் அவற்றை நடைமுறையில் மக்களுக்குக் காட்டிவைக்க இடதுசாரிகள் மறந்துவிட்டனர். பண்டாரநாயக்காவோ தேசியமயம், சோஷலிஸம் என்பனவற்றைத் தமது ஆற்றல்மிகு பேச்சினாலும், ஆட்சித் திறமையினாலும் திறந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் திறந்துவிட்டுச் சென்ற பாதையை நல்வழிப்படுத்திச் சீரோங்கச் செய்வது ஸ்ரீமாவோ தலைமையிலான முக்கூட்டு முன்னணியினால்தான் முடியுமென்பதை மக்கள் தீர்மானித்துவிட்டார்கள்'' என அவர் கூறினார்.

திருவாளர்கள் சோ. கார்த்திகேசு, சண்முகநாதன், பி. கணேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறை இ. போ. ச. பணியகத்தில் பொறியியல் முகாமையாளராகப் பணிபுரிந்த திரு. டீ. ஜீ. இத்துதாஸ கோண்டாவில் இ. போ. ச. டிப்போவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் இ. போ. ச. டிப்போவிலிருந்து பொறியியல் முகாமை யாளரான திரு. பாலசிங்கம் ஜெயசிங்கம் பருத்தித்துறை டிப்போவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார், திரு. ஜெயசிங்கம் முன்னரும் இங்கு பணிபுரிந்து இடமாற்றலாகிச் சென்றிருந்தவர்.

## ''பழைய இடத்துக்கே மாற்றவும்'

சுழிபுரம். வெள்ளி

தொல்புரம் உபதபாற் கந்தோரை முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட இடமான தொல்புரம் மடத்துப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள பழைய இடத்துக்கே மீண்டும் இடமாற்றம்செய்யும்படி தபால் பகுதியைக் கோரும் தீர்மானத்தை சுழிபுரம் கிராம சபையினர் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர். கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுழிபுரம் கிராம சபைக்குட்பட்ட எந்த உபதபாற் கந்தோருக்கும் தனியான தபால் கொடுக்கும் வேலைகளை வழங்கவேண்டாம் எனவும் அப்படிச் செய்வதால் சுழிபுரம்தபாற் கந்தோரின் தரம் ஓர் உபதபால் கந்தோர் தரத்துக்கு குறைந்துவிடும் என்றும் மேலும் மூன்று உபதபால் கந்தோர்களை திறக்கவேண்டும் எனவும் கோரும் மற்றொரு தீர்மானமும் சபையில் நிறைவேறியது.

தபால் அமைச்சர், தபால் தந்தி மேலதிகாரிகள் வட்டுக்கோட்டைத் தொகுதி எம், பி. ஆகியோருக்கு தீர்மானப் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## அமைச்சர் மன்னார் விஜயம்

முசலி, வெள்ளி

மன்னார் மாவட்டத்துக்கு விளையாட்டுப்பகுதி அமைச்சர் திரு. கே. பி. ரத்னாயக்கா இம்மாதம் ஒன்பதாம் திகதி உத்தியோக பூர்வமாக விஜயம் செய்கின்றார்.

ஒன்பதாம் திகதி காலை 10-30 மணியளவில் சபா மண்டபத்தில் மன்னார் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி முன்னேற்றங்கள் சம்பந்தமாக மன்னார் மாவட்ட விளையாட்டுக்கழக பிரதிநிதிகள், விளையாட்டில் முற்போக்கு எண்ணம் கொண்டோரோடு ஒரு மகாநாடு நடத்தப்படும்.

இதற்கான ஆயத்தங்களை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் செய்துவருகின்றார்.




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எல்லோரும் தவறு செய்பவர்களே. ஆனால் தாம் செய்யும் தவறிலிருந்து விடுதலையடைய முயற்சிப்பவர்களோ வெகுசிலர். அப்படி முயற்சிப்பவர்கள் மேலானவர்கள், அவர்கள் அதனாலேயே மேலானவர்களாக மதிக்கப்படுகின்றனர்.

— மகாத்மாகாந்தி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 589.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 17-ந் திகதி (3-10-70)


## முன்னேறும் புதுசீனம்

உலகிலேயே ஜனத்தொகையில் பெரிய நாடான புதுசீனம், தனது 21-வது ஆண்டு விடுதலை விழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் இலங்கைப் பொதுமக்கள் அந்நாட்டு மக்களுக்குத் தங்கள் உளங்கலந்த நல்வாழ்த்தையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளுகின்றனர். சென்ற இருபத்தொரு வருடங்களில் புதுசீனம் அடைந்துள்ள முன்னேற்றம் கொஞ்சமல்ல. பல்விதங்களிலும் தாழ்வுற்றுக் கிடந்த அந்நாடு இன்று மேற்கத்திய வல்லரசுகளும் கூட அஞ்சும்படியாக ஓர் அணுசக்தி நாடாகத் திகழ்ந்து, கைத்தொழிலிலும் விவசாயத்திலும் பெரிதும் முன்னேறியுள்ளது. மாசேதுங்கின் தலைமையில் நடைபெறும் கம்யூனிஸ ஆட்சியே இதற்குக் காரணமாகும். இந்த ஆட்சியிலே சில தவறுகள் நடந்திருக்கலாம். என்றாலும் அனுபவம் ஏற்பட ஏற்பட அந்நாடு தன் பழைய தவறுகளைத் திருத்திக்கொண்டு, ஆசியாவிலேயே இன்று தன்னிறைவுபெற்ற மேலான வல்லரசாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது ஒரு தமிழ் மூதுரை. உப்பிட்டவரையே அவ்விதம் நினைக்க வேண்டுமாயின், நமக்கு உணவு அளிப்பவர்களை நாம் எவ்வளவு நன்றியுடன் நினைக்கவேண்டும்' உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பர். அதுவும் நமக்கு உலகில் யாருமே அரிசி விற்க மறுத்த ஒரு நெருக்கடியான சமயத்திலே நமக்கு அரிசியைக் கொடுத்து அதற்குப் பதிலாக நமது றப்பரை மண்டமாற்றாக வாங்கிக்கொண்ட புதுசீனத்துக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோமென்பதை விளக்கத்

நிலைமை நாடுகளின் சார்பாக இலங்கையின் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தலையிட்டு சண்டையை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டதற்குப் புதுசீனம் செவிசாய்த்ததுடன், இந்திய மண்ணிலிருந்து பின்வாங்கவும் செய்தது இலங்கைப் பிரதமரின் வார்த்தைக்கு புதுசீனம் எவ்வளவு மதிப்புக் கொடுத்துள்ளதென்பதை இது காட்டுகின்றது. சென்ற பல வருடகாலமாக இந்திய—சீன எல்லையில் அமைதி நிலவுவது வரவேற்கத்தக்கதே, என்றாலும் அவ்விரு பெரும் அண்டை நாடுகளுக்கும் இன்னும் நல்லுறவு ஏற்படவில்லை. புகழ்பெற்ற அறிஞர் பெட்ராம் ரஸல், கொழும்பு புறக்டர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், புதுசீனத்துக்கும் இந்தியாவுக்கும் சமாதானம் ஏற்படுத்துவதில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமா எடுத்த பெருமுயற்சியைப் பெரிதும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இரு பெரிய ஆசிய நாடுகளுக்குமிடையே நல்லுறவு ஏற்படுத்த நமது பிரதமர் ஸ்ரீமா, தொடர்ந்து முயற்சி எடுக்கவேண்டுமென்று அரசியல் ஞானியான திரு. சிவசுப்பிரமணியம் கூறும் யோசனை வீண்போகமுடியாது. நமது அண்டை நாடுகளில் அமைதி நிலவவேண்டியது இலங்கைக்கே எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை.

பலதுறைகளிலும் முன்னேறிவரும் புதுசீனத்தை உலக மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் வசிக்கும் ஒரு நாட்டை அமெரிக்கா இன்னும் அங்கீகரிக்காமலும் அதை ஐக்கியநாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ளாமலும் இருப்பதற்கு என்ன நியாயம்? காரணம் எது

# நாஸருக்குப் பின் மேற்கு ஆசியா; வல்லரசுகள் நிலை என்ன?

மாவீரர் நாஸர் திடீரென மறைந்தபின், மேற்கு ஆசியாவின் நிலைமையில் ஏதும் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படுமா? நிலைமை மேம்படுமா? அல்லது மோசமாகுமா? இதுபற்றியே உலக நாடுகளிலும், சிறப்பாக மேற்கு ஆசியாவிலும் மக்கள் கவலையுடன் சிந்திப்பர் 'பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது போல் அரபு நாடுகளின் நிலைமை இன்றுள்ளது. ஜோர்தானிலே அரபுக்களுக்கும் அரபுக்களுக்கும் தற்கொலைச் சண்டை நடந்து, பல்லாயிரம் அரபுகள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அரபுகளின் ஒற்றுமைச் சின்னமான நாசர் அவர்கள் மின்னல் இடி விழுந்ததுபோல் திடீரென மறைந்தார். நெருக்கடியான இச்சமயத்தில் அரபு மக்களுக்கு இதைவிட மோசமான ஒரு கெடுதல் ஏற்பட்டிருக்கமுடியாது

அரபுகளின் பலவீனமான நிலையை இஸ்ரேலியர்கள் பயன்படுத்தி அதிக பிடிவாதம் காட்டுவார்களா? தாங்கள் ஏற்கனவே ஆக்கிரமித்த பகுதிகளைக் காலி செய்யாததுடன், புதிய இடங்களையும் ஆக்கிரமிக்க முற்படுவார்களா? இஸ்ரேலுக்கு ஆயுதங்களை மேலும் கொடுக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதால் இஸ்ரேல் விட்டுக்கொடுத்துச் சமரசம் பேச மறுக்குமா என்ற பல கேள்விகள் எழுகின்றன. புதிய நிலைமையை இஸ்ரேல் நேர்மையற்ற முறையில் பயன்படுத்திக்கொள்ள முற்படின், உலகின் வெறுப்புக்கு அது உள்ளாவதுடன், மேற்கு ஆசியா மட்டுமன்றி உலகின் அமைதியையே கெடுப்பதாக முடியும். முன்னாள் இஸ்ரேலிய அதிபரான பென்குரியனை இதுபற்றிக் கேட்டதற்கு எல்லாம் ரஷ்யாவின் கையில்தான் உள்ளதென்றார். அரபு நாடுகளுக்கு இன்று ரஷ்யா உதவ முன்வந்துள்ளதால் தான் அவர்கள் சற்றே மூச்சுப்பிடித்து நிற்கமுடிகிறது இஸ்ரேலுக்கு அமெரிக்க உதவி கிடைப்பதுபோல் அரபுகளுக்கு ரஷ்ய உதவிகள் கிடைக்கின்றன. உண்மையில் இங்கு போராட்டம் நடப்பது அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குந்தானே அன்றி அரபுகளுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் அல்ல என்பது பகிரங்க ரகசியம்.

என்றாலும் அமைதி ஏற்படும் என்பதற்கான சில நல்ல அறிகுறிகளையும்காணக் கூடியதாக உள்ளது. மேற்கத்திய நாடுகளின் விமானங்களைத் திசை திருப்பித் தகர்த்து அதிலிருந்த பிரயாணிகள் சிலரை அரபுக் கொமாண்டோக்கள் பிணையாக வைத்திருந்தனர். அவர்களை எல்லாம் நிபந்

பராசரன்

தனையின்றிக் கொமாண்டோக்கள் விடுதலைசெய்யவே பிரிட்டன் முதலிய நாடுகளும் தாங்கள் காவலில் வைத்திருந்த பாலஸ்தீன் விடுதலைப்படையினரைத் திருப்பி அனுப்பிவிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது மேற்கத்தித் நாடுகளின் விமானங்களைத் தடுத்து அதிலிருந்த பிரயாணிகளைக் கைது செய்த செயலுக்காகப் பாலஸ்தீன விடுதலைப்படையினர் பெரும் கஷ்டநஷ்டங்களை அனுபவித்துவிட்டனர் அவர்களில் பல்லாயிரக் கணக்கானவர் ஜோர்தானில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் தாங்கள் கைது செய்து வைத்திருந்த இஸ்ரேலியரையும் பாலஸ்தீன விடுதலைப் படையினர் நிபந்தனையின்றி விடுதலைசெய்துவிட்டதற்குக் காரணம் எதுவாயினும் இதனால் நெருக்கடி ஓரளவு குறைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் அரபுகளின் மாபெரும் தலைவர் நாஸரின் மறைவுக்கு உலக மக்களில் பெரும்பாலோர் தெரிவித்துள்ள அனுதாபம், இஸ்ரேலுக்கு மறைமுகமான ஓர் எச்சரிக்கையாகும். இனியும் பிடிவாதம் காட்டி, ஆறு நாள் யுத்தத்தில் பிடித்த பகுதிகளைக் காலிசெய்ய மறுத்தால் உலக மக்களின் வெறுப்புக்கும், கண்டனத்துக்கும் அந்நாடு உள்ளாகும். இஸ்ரேலுக்கு ஆபத்து ஏற்படாமல் காப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமேயன்றி, யுத்தத்தின் மூலம் அது அநீதியாகப் பிடித்து வைத்துள்ள இடங்களை அதற்குப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டும் என்பதல்ல. கிழக்கில் ஒரு வியட்னாமில் சிக்கிக்கொண்டு அதிலிருந்து விடுபடமுயலும் அமெரிக்கா, மேற்காசியாவில் மற்றொரு வியட்னாமை ஏற்படுத்திக்கொள்ள நிச்சயம் விரும்பமுடியாது. ஆகவே இஸ்ரேல் இனியும் இவ்விஷயம் பற்றிப் பிடிவாதம் காட்டக்கூடாதென்றே அமெரிக்கா தன் செல்வாக்கைப் பயன்படுத்தி யோசனை கூறக்கூடும். பிடித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேறமறுத்ததுதான் பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் மேற்கத்திய விமானங்களைப் பிடித்துத் தகர்த்ததற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

அரபு மக்களுக்குப் பல அநீதிகள் செய்யப்பட்டிருப்பினும், இஸ்ரேல், ஐ. நா. சபையில் ஓர் அங்கத்துவ நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டபின், அதை அரபு நாடுகள் இன்னும் அங்கீகரிக்காமல் இருப்பது, யுத்தத் தீ அணையமுடியாமல் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இஸ்ரேலை அங்கீகரிக்கவேண்டும் என்று ரஷ்யாவும் தன் செல்வாக்கை வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியுமாயின் சமாதானத்தையும், அமைதியையும் பெரிதும் விரும்பும் அரபு மக்கள் அதற்குச் செவிசாய்க்கக்கூடிய வாய்ப்பு முன்னைவிட இப்போது அதிகரித்துள்ளது. மேற்கு ஆசியாவில் சண்டையை இனியும் நீடிக்காமல் அமைதி ஏற்படும்படி அமெரிக்கா ரஷ்யா இவ்விரு வல்லரசுகளும் தங்கள் சுயநலனை முன்னிட்டாயினும் செய்ய முன்வரவேண்டிய சமயம் வந்துவிட்டது.

# கண்ணுள்ள பிச்சைக்காரர், கண்ணற்ற பிச்சைக்காரருக்கு வழங்கும் தர்மம்

அழுக்குப்பிடித்த கிழிந்த சட்டை, வேட்டி. கையில் ஒரு தடி தள்ளாடித் தள்ளாடி ஒரு கிழவர் பஸ்ஸிலிருந்து இறங்கினார், வயது கிட்டத்தட்ட 80 இருக்கும். கண்ணிலிருந்து தண்ணீர் வடிகிறது. அவரைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. அவருக்கு ஏதாவது பிச்சை கொடுக்கலாமென்று தோன்றியது.

அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்கையிலிருந்த ஐந்துசதம் காசை, தெரு ஓரம் உட்கார்ந்திருந்த கண்ணில்லாத ஒரு பிச்சைக்காரருக்குப் போட்டுவிட்டுச் சென்றார். இதைக் காண வியப்பாக இருந்தது.

மண்டபத்திலே அமர்ந்து பிரார்த்தனை செய்கின்றனர். சுவாமிஸ்ரீரங்கானந்தா பிரார்த்தனை நடத்தினார் சமஸ்கிருத சுலோகங்கள், பஜனைப் பாடல்கள் எல்லாம் அச்சிறுவர் சிறுமிகளுக்கு மனப்பாடம். எல்லாரும் சேர்ந்து சொல்லுகின்றனர். நகைச்சுவையுடன் சுவாமி அவர்கள் பேசி, அக்குழந்தைகளின் மனதில் தெய்வநம்பிக்கையாகிற வித்தை விதைக்கின்றார். அக்குழந்தைகளைப் பார்த்த போது பெருமகிழ்ச்சியளித்தது. நாமும் ஒரு குழந்தையாக [illegible] என்று தோன்றியது.

முன்காலத்திலே குரு

கம் நடத்த இருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீ ராமநாதர் கோவிலுக்கான பல தர்ம சொத்துக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளனவாக ஆனால் அதிலிருந்து எவ்விதபணமும் பல வருடங்களாம் அக்கோயிலுக்குக் கிடைப்பதில்லை என்றும் அறிந்தேன். ஈழத்துப்பணம் இந்தியா செல்ல முடியாமல் செலாவணிச்சட்டம் தடுப்பதாயின், அந்தப்பணத்தை இங்குள்ள திருக்கேதீஸ்வரம் முதலிய திருப்பணிகளுக்காவது பயன்படும்படி செய்யமுடியாதா? இந்தச் சாட்டிலே யாராவது அந்தத்தர்மப்பணத்தை தம் குடும்பத்துக்கு பயன்படுத்தினால் அதுகுடும்பத்துக்கேநல்லதல்ல, "சிவசொத்து குலநாசம்" என்பார்கள் இதை உணர்ந்தவர்கள். கோயில் தர்மப்பணத்தை தங்களுக்கோ தங்கள் குடும்பத்துக்கோ பயன்படுத்துவார்களா?

0 0 0

தமிழகத்திலே ஒவ்வொரு முக்கிய ஊரிலும் கோவில் பொறுப்பில் ஒரு கல்யாண மண்டபம் கட்டி, பொது மக்களுக்குக்குறைந்த வாடகைக்கு திருமணம் நடத்த அளிப்பதென்றும் சமையல் முதலிய எவ்லாவற்றுக்கும் அங்கு வசதியிருக்குமென்றும், தமிழகக்கோயில்கள் சமூகத்துக்குப் பயன்படும்படி தமிழக அரசு முயன்று வருவதாகவும் அறியமகிழ்ச்சியாக இருந்தது.

கோயில்களுக்குரிய பல தர்மக் காணிகளை சில "பெருச்சாளிகள்" விழுங்கியுள்ளனவாம் அவற்றையெல்லாம் தமிழக அரசு பறித்து பொதுமக்களின் பசிப்பிணியைத்தீர்க்க பயன்படுத்தினால் கோயில் தர்மங்கள் புத்துயிர்பெறுவதுடன் தமிழக அரசும் மக்களின் நன்றிக்குப்பாத்திரமாகும், ராமேஸ்வரத்தில் யாத்திரீகர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைப்பதில்லை என்று கூறியபோது கோவில்பொறுப்பில் ஒரு நல்ல 'கான்டீன்' ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாக திரு. தீனதயாளு தெரிவித்தார். ஈழத்தில் இலவச அரிசி மக்களுக்குக் கிடைப்பதை அவர் வியப்புடன் பாராட்டினார் தமிழகத்திலே யாரும் பட்டினி கிடக்காமல் கோயில்கள் மூலம் தர்மக்கஞ்சியாவது வார்க்கும்படி ஏன் செய்யமுடியாது?

......

# மறைந்த மாவீரருக்கு ஈழநாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே நமக்கு அரிசியைக் கொடுத்து அதற்குப் பதிலாக நமது றப்பரை மண்ட மாற்ருக வாங்கிக்கொண்ட புதுசீனத்துக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிருேமென்பதை விளக்கத் தேவையில்லே. இலங்கைக்கு சாதகமான முறையிலே அரிசி ரப்பர் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நீடித்துவருவதுடன், சமீபத்தில் இங்கு அரிசிப் பங்கீட்டளவை அதிகரித்தபோது, ஒரு லட்சம் டன் அதிகப்படி அரிசியை வட்டியில்லாக் கடனுகக் கொடுக்க அது பெருந்தன்மையுடன் முன்வந்தது ஆபத்தில் உதவுபவரே உண்மை நண்பர் என்ற இலக்கணத்துக்கு இதனுல் புதுசீனம் முற்றிலும் பொருத்தமானதாகும்,

இந்த விஷயத்தில் மட்டுமல்ல, இந்தியாவுக்கும் புதுசீனத்துக்கும் எல்லேச் சண்டை ஏற்பட்டபோது நடு உலக மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் வசிக்கும் ஒரு நாட்டை அமெரிக்கா இன்னும் அங்கீகரிக்காமலும் அதை ஐக்கியநாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ளாமலும் இருப்பதற்கு என்ன நியாயம்? காரணம் எதுவாயினும் சரி, அந்நாட்டை ஐ. நா ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ளாத வரை, அந்த ஸ்தாபனத்துக்கே பலவீனமாவதுடன், உலக சமாதானத்துக்கும் அது ஆபத்தாகும். சீப்பைஒளித்து வைப்பதால் கல்யாணம் நின்றுவிடாது. எவ்வளவு சீக்கிரத்தில் புதுசீனமும் ஐ. நா. ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றதோ அவ்வளவும் உலக அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் உதவுவதாகும் அந்த நன்நாள் வெகுவிரைவில் வரவேண்டுமென்பதே இச்சமயம் இலங்கை மக்களின் பிரார்த்தனையாகும்.

## 'வர்த்தக ஆசிரியர் நியமனத்தில் ஒழுங்கு வேண்டும்'

பருத்தித்துறை வெள்ளி "விரைவில் நியமிக்கும் வர்த்தக ஆசிரியர் நியமனத்தில் சில ஜனநாயக கோட்பாடுகளே அடிப்படையாகக் கொண்டு நியமிக்கப்படப் வேண்டும் வர்த்தக பாடங்களில் க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும், தொழில் நுட்பப்பாடசாலையில் இரண்டு பிரிவிலும் கணக்கியல் சுருக்கெழுத்து தட்டச்சுப் பிரிவு ஆகியவற்றில் சித்தியடைந்தவர்கள் அடுத்த இடத்தைப் பெறவேண்டும் மூன்ருவதாக கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பாடத்தில் டிப்ளோமா பெற்றவர்கள்கவனிக்கப்பட வேண்டும் இவற்றைவிட இன மத அடிப்படையில் தெரிவு செய்யப்படும் முறை தவிர்க்கப்படவேண்டும்"

இவ்வித மகஜர் ஒன்றை அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கல்வியமைச்சர் பதியுதின் மகமூத்திற்கும் உவியமைச்சர் திரு பி. வைதுடாவைக்கும் அனுப்பிவைத்துள்ளது.

## 'நடு நிலைமை நாடுகளின் இழப்பு'

பருத்தித்துறை, வெள்ளி "ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனதிபதி கமால் அப்துல் நாஸரின் மரணம் சமாதான சகவாழ்வுக்கும் நடுநிலைமைக் கொள்கைக்கும் ஒரு பேரிழப்பாகும். நாஸர் ஒரு தனிமனிதனுக வாழவில்லை. அரபு மக்களின் ஒற்றுமையின் சின்னமாகவாழ்ந்தவர் அவர் ஒரு தலைவனுக்குரிய சகல குணதிசயங்களும்கொண்டு வாழ்ந்தவர். நடுநிலைமை நாடுகளின் நண்பனுக வாழ்ந்தவர்."

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு கே. சிவசிதம்பரம் நேற்றுக் காலை கல்லூரியில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் ஜனதிபதி நாஸரின்மரணம் குறித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

நாஸரின் மரணத்திற்கு இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது,

## 124 பேர் தெரிவு

பருத்தித்துறை வெள்ளி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு இவ்வாண்டு ஆசிரியரல்லாதோரில் 124 பேர் பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலே வரலாற்றில் இவ்வாண்டே இத்தனை ஆசிரியரல்லாதோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் கணிதப் பிரிவுக்கு மாத்திரம் 41 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;

அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்கையிலிருந்த ஐந்துசதம் காசை, தெரு ஓரம் உட்கார்ந்திருந்த கண்ணில்லாத ஒரு பிச்சைக்காரருக்குப் போட்டுவிட்டுச் சென்றுர். இதைக் காண வியப்பாக இருந்தது.

"பெரியவரே! உமக்கு ஏதாவது கொடுக்கலாமென்று நினைத்தேன். நீங்கள் அவருக்குக் கொடுக்கிறீரே"

"ஆமாம் தினசரி அவருக்குக் கொடுப்பேன் எனக்காவது கண் இருக்கிறது. அவருக்கு அதுவுமில்லையே" என்ருர்.

"உங்களுக்கு யார் காசு கொடுக்கிறுர்கள்?" என்று கேட்டதும் உடன் "கடவுள் கொடுக்கிருர்" என்றுர் அந்தப் பெரியவர். இதிலிருந்து ஒரு பெரிய பாடம் கற்கமுடிந்தது. பரம ஏழை கூட, ஒரு பிச்சைக்காரர்கூட, தர்மம் செய்யலமென்பதை உணர்ந்தேன். நம்மைவிட எளியவர்களிடம் நாம் கருணை காட்டினுல்தானே கடவுள் நமக்குக் கருணைகாட்டுவார் இல்லாவிடில் தெய்வத்தின் கருணையைப்பெற நமக்கு என்னதகுதி?

பஸ்ஸிலிருந்து தள்ளாடி இறங்கிய அந்தப் பெரியார் கொழும்பிலே ஒரு கோயில் வாசலில் இருந்து அங்கு வருபவர்கள் கொடுப்பதைப் பெற்று அன்றுடம் வயிறு கழுவுவதாக அறிந்தேன். தமக்கு "தெய்வம் கொடுக்கிறது" என்பது பற்றி அந்த ஏழைக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை! அவ்வித உறுதியான நம்பிக்கை வந்துவிட்டவர்களுக்கு, கவலே ஏது, விசாரமேது?

0 0 0

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலே ஒவ்வொரு போயா தினத்திலும் சென்ற 18 வருடகாலமாக சமயபாட வகுப்பு நடந்துவருகின்றது. சுமார் 650 பிள்ளைகள் இங்கு படிக்கிருர்களாம், 15 சிறுவர் சிறுமிகளுடன் சுவாமி அசங்கானந்தாவினுல் ஆரம்பிக்கப்பெற்ற இவ்வகுப்பு இப்போது பன்மடங்குப்பெருகி வளர்ந்துவருகிறது. சென்ற போயாவன்று அங்கு தற்செயலாகச் சென்றேன். அன்றும் பல சிறுவர் சிறுமியரைப் பெற்றேர்கள் அங்கு புதிதாகச் சேர்க்க வந்தனர்,

அன்று வருடாந்தப் பரீட்சை நாளாம். மடத்தின் பல பகுதிகளிலும். புதியகட்டடத்திலும் கூட மாணவ, மாணவிகள் இருந்து விடை எழுதிக்கொண்டிருந்தார்கள். முதலில் ஆசிரியர்களும் (22 ஆண், பெண் கௌரவ ஆசிரியர்கள்) மாணவ மாணவிகளும் தெய்வநம்பிக்கையா கிற ந்தை விதைக்கின்றுர். அக்குழந்தைகளைப் பார்த்தபோது பெருமகிழ்ச்சியளித்தது. நாமும் ஒரு குழந்தையாக முடியாதா என்று தோன்றியது.

முன்காலத்திலே குருகுலத்தில் சேர்ந்துதான் சிறுவர்கள் கல்வி பயிலுவராம். ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் நடைபெறும் இந்த குருகுலத்தில் சேர்ந்து படிக்கும் குழந்தைகளை அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறவேண்டும். அவர்களதுஎதிர்காலம் மிகச்சிறப்பாகஇருக்குமென்பதில் ஐயமில்லை.

0 0 0

இந்தியாவிலிருந்து மட்டுமன்றி. உலகின் பல நாடுகளிலிருந்தும் யாத்திரீகர்கள் வந்து இந்த மிஷனில் தங்கி இருந்து செல்லுகின்றனர். இலங்கை, இந்திய டாக்டர்களுக்கு சமீபத்தில் அமெரிக்கா நடத்திய ஒருதெரிவுப் பரீட்சை, புதிய பெரிய மண்டபத்தில் நடந்தது. பல இந்திய டாக்டர்கள் அங்குள்ள விடுதியில் தங்கியிருந்தனர். இம்மாதம் ஆசிரியர்களும், மற்றும் பல பிரமுகர்களும் தொடர்ந்து வருகின்றுர்களாம். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் துவங்கும் எந்தப்பணியும் அவர்அருளாலே பல்கிப் பெருகிவளர்ந்தோங்கி வருவதைப்பார்க்கக் கூடியதாகவுள்ளது.

ராமேஸ்வரம் கோயில் நிர்வாக அதிகாரியான ஸ்ரீதீனதயாளு என்பவர் தம் குடும்பத்துடன் அங்குவந்து தங்கி இருந்தார். 60 லட்ச ரூபா செலவில் அக்கோயிலின் இரண்டாவது பிரகாரத்தின் திருப்பணிகள் நடந்து வருவதாயும் யூனெஸ்கோ பிரதிநிதி அங்குவந்து பார்த்துவிட்டு இத்திருப்பணிக்கு 12 ஆயிரம் டாலர் (சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள) பொருள்கள் அளிப்பதாகத் தெரிவித்தாராம், இதுவரை சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு திருப்பணிவேலைகள் நடந்துள்ளனவாம்.

இக்கோயில்மூலம் சமூகத்துக்கு ஏதும் தொண்டுகள் நடக்கின்றனவா என்று கேட்டதற்கு, தேவஸ்தானத்தின் ஆதரவில் சமஸ்கிருத கல்லூரி பெண்கள் உயர்தரக்கல்லூரி முதலியன நடப்பதாகவும் பல மாணவருக்கு இலவச உணவு, முதலியன அளிக்கப்படுவதாயும் ஒவ்வொரு நாளும் இரவில் சுமார் 40 பேருக்கு தர்மக்கஞ்சி வார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இக்கோவில் கும்பாபிஷேகம் நடந்து 23 வருடங்களாகின்றனவாம் சிற்சில திருப்பணிகள் செய்து, வருகிற தைமாதத்தில் கும்பாபிஷேயின், அந்தப்பணத்தை இங்குள்ள திருக்கேதீஸ்வரம் முதலிய திருப்பணிகளுக்களா?

0 0 0

தமிழகத்திலே ஒவ்வொரு...யெல்லாம் தமிழக அரசு பறித்து பொதுமக்களின் பசிப்பிணியைத்தீர்க்க பயன்...கோயில்கள் மூலம் தர்மக்கஞ்சியாவது வார்க்கும்படி ஏன் செய்ய முடியாது?

......

# மறைந்த மாவீரருக்கு ஈழநாட்டு மக்கள் செலுத்திய அஞ்சலி

"வாயானே, மனத்தானே மனத்துள்ள நின்ற கருத்தானே கருத்தறிந்து முடிப்பான் தன்னே..." என்று தேவாரம் கூறுகின்றது அது அப்படியே உண்மை என்பதை நேற்று அனுபவத்தில் கண்டேன் எப்படித் தெரியுமா?

ஐக்கிய அரபுக் குடியரசின் தலைவரான மாவீரர் நாஸர் அவர்களின் திடீர் மரணத்தைக் கேட்டு இலங்கை பொது மக்கள் திடுக்குற்று, பெரிதும் வருந்துகிறுர்கள் அவருக்கு மரியாதை செலுத்த இலங்கையில் ஒரு நாள் விடுமுறை விட்டோம். கடைகளை அடைத்தோம். வானெலிமூலம் இரண்டு நாட்கள் அழுதோம். தேசியக் கொடிகளை நம் துக்கத்துக்கும் மரியாதைக்கும் அறிகுறியாகத் தாழப் பறக்க விட்டோம். பொதுக்கூட்டங்கள் போட்டு அவ்வீரரின் அரும் செயல்களைப் போற்றினேம். நமது நாட்டு பிரதமர் தன் சிரமத்தையும் பாராமல், 11 கோடி அரபு மக்களின் கண்ணீரைத் துடைக்க கெய்ரோவுக்கு பறந்து சென்றிருக்கிருர்,

முன்னர் நேருஜி மறைந்த போதும், "நான் அங்கு செல்ல வேண்டும்" என்று புலம்பிக் கொண்டே அங்கு செத்தவீட்டுக்குச் சென்று, புதல்வி இந்திரா காந்திக்கும் இந்தியப் பொது மக்களுக்கும் இலங்கையின் சார்பாக அவர் ஆறுதல் கூறினுர். ஆறுதல்கூறி, இந்தியா மக்களின் நல்லெண்ணத்தை இலங்கைக்குப் பெற்றுத் திரும்பினுர் அரசியலில் இரு நாடுகளுக்கும் ஏதும் வேற்றுமை இருக்கலாம், ஆனுல் இருவருக்கும் உள்ள இரத்தபாசத்தை, புராதன உறவுகளை எப்படி மறுக்க முடியும்?

எதற்குப் போனுலும் போகாவிடினும் செத்தவீட்டுக்குச் செல்ல வேண்டுமென்பார்கள். அதற்கிணங்க இப்போது இலங்கையின் பிரதமர் ஸ்ரீமா, கெய்ரோவுக்குச் சென்றிருக்கிருர். அங்கு உலகத் தலைவர்களில் பலர் தங்கள் துக்கத்தையும் மரியாதையையும் தெரிவிக்க வந்துள்ளனர். இலங்கை பிரதமரும் இச்சமயம் அங்கு சென்றதன் மூலம் இலங்கைக்குப் பல நாட்டு தலைவர்களின் உறவும் நல்லெண்ணமும் கிடைக்கக் கூடியதாகவும், அதனுல் வேறுபல நன்மைகள் கிடைக்கக் கூடியதாகவுமிருக்கும் அவருக்கு இது உல்லாசப் பிரயாணம் அல்ல. சிக்கன வகுப்பில் சிரமப்பட்டு செல்லுகிருர். மதிப்பு மிக்க இலங்கையின் தூதராக பிரதமர் ஸ்ரீமா இப்படிச் செல்லுவதன் மூலம், நம்நாட்டின் மதிப்பு உலகில் உயருகின்றது. சிரமம் பாராமல் அவர் இவ்விதம் கடமை பார்க்கும் அவருக்கும் நம் நாடும் கடமைப் பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

வீரர் நாஸரின் திடீர் மறைவைக் கேட்டதும் என்னையும் அறியாமல் என் மனம் ஏதோ நெருங்கிய உறவினரை இழந்ததுபோல் பதைத்தது. என் துக்கத்தையும் மரியாதையையும் கொழும்பிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசின் ஸ்தானிகராலயம் சென்று தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனுல் முயற்சி எதுவும் எடுக்கவில்லே. தற்செயலாக அல்ல கடவுள் செயலாக, சில அன்பர்கள் என்னையும் தங்களுடன் அங்கு அழைத்துச் சென்றனர்

மக்காந்தி ஏஸ்தாவிலுள்ள அந்தக் காரியாலயத்துக்கு பல ஸ்தாபனப் பிரதிநிதிகளும் வந்து மலர் வளையங்களை வைத்து தங்கள் அன்பையும் மரியாதையையும் தெரிவித்தனர், மிகப் பெரிய அழகிய மலர் வளையம் ஒன்று வீரர் நாஸரின் படத்துக்குப் பக்கத்தில் வைக்கப் பட்டிருந்தது. அதை யார் வைத்தது தெரியுமா? மக்கள் சீன அரசாங்கப் பிரதிநிதியாம். படத்தின் முன்னல் திருக்குரான் நூல் திறந்து வைக்கப்பட்டிருந்தது. விசாரித்ததில், அது ஒரு விசேஷ பிரார்த்தனை என்று பக்கத்திலிருந்த அன்பர்கள் தெரிவித்தனர். விசேஷ புத்தகத்தில் பலரும் கையெழுத்திட்டனர். 'ஈழநாடு' வாசக அன்பர்கள் சார்பாக சோகமே உருவாகி, கண்ணீரும் கம்பலையுமாக இருந்த ஸ்தானிகர் துக்கத்தைப் பகிர்ந்துகொண்டு திரும்பினேன். "மனத்துள் நின்ற கருத்தானே, கருத்தறிந்து முடிப்பான் தன்னே" என்ற தேவார வேதவாக்கு முற்றிலும் உண்மை என்பது மீண்டும் உறுதிப்பட்டது.

0 0 0

பற்றிநின்ற பாவங்கள் பாற்றவேண்டிற் பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில், சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்கவேண்டிற் சொல்லுகேன் கேணெஞ்சே துஞ்சாவண்ணம் உற்றவரு முறுதுணையு நீயே யென்று முன்னையல்லா லொருதெய்வ முன்கேனென்றும் புற்றரவக் கச்சார்த்த புனிதாவென் றும்பொழிலாரூரா வென்றே போற்றுநில்லே.

அப்பர்

......

## ஆள் மாருட்ட வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி மாநகரசபைத் தேர்தலில் ஆள்மாருட்டம் செய்ததாக பாஷையூர் வாசியொருவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் விசாரணை முடிவில் எதிரி விடுதலே செய்யப்பட்டார்,

தர்மதாஸ் என்றழைக்கப்படும் தேவதாஸ் செபஸ்தியாம்பிள்ளை மாநகரசபைத் தேர்தலில் ஆள்மாருட்டம் செய்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு ஜே. ஜே. எப், ஏ, டயஸ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு வின்சென்ட் பாலசிங்கம் ஆஜரானுர்.

விசாரணை முடிவில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் நீதிபதி எதிரியை விடுதலே செய்து தீர்ப்பளித்தார்.

......

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

சுன்னுகம் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழ: மறியலுக்கு போயியிருக்கிறீரா?- இப்ப விளக்கமறியலிலிருந்துதான் வருகிறேன். திருட்டுக்குற்றத்திற்காக மறியலிலிருக்கிறேன்.

வழ; பொய்ச்சாட்சியமளிப்பதுமறியலுக்குரியகுற்றமென்று தெரியுமா?- தெரியாது:

நீதி: பொலிஸ்கோர்ட்டில் சாட்சியமளிப்பதற்கு முன் உண்மைபேசுவதாக சத்தியம் செய்தீர்?- ஆம்.

நீதி: பொலிஸ்கோர்ட்டில் உண்மை சொன்னீரா?- பொய் சொன்னேன்.

நீதி: ஏன்?- பொலிசார்பயமுறுத்தியதால்.

நீதி: பொய் வாக்குமூலமளித்தீர்?-ஆம்.

நீதி: இன்னெரு மனிதனைக் கொலைக்குற்றவாளியாக்கப் பொய் சாட்சியமளித்தால் உமக்கும் மரணதண்டனை விதிக்கமுடியுமென்று தெரியுமா?-தெரியாது.

நீதி: பொலிஸ் கோர்ட்டில் அளித்த சாட்சியங்கள் அனைத்தும் பொய்?-ஆம்.

பொய்சாட்சியமளித்ததாக தருமலிங்கம்மீது குற்றம் சாட்டப்பட்டு இன்று காலைவசாரணைநடைபெறும்

— —

## பிரயாணிகள் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி ஏழாலை பஸ் பிரயாணிகள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் ஏழாலை வடக்கு கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாகசபை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவராக திரு. க. யோ. பாலசுந்தரம், காரியதரிசி திரு. சி. சத்தியநேசனும் (சத்தியம்) தனதிகாரி திரு. கு. சிவானந்தமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏழாலை மத்திவரை ஒரு குறுகிய பஸ் சேவையை ஆரம்பிக்கும்படி போக்குவரத்து அமைச்சரையும், இ போ ச. தலைவரையும், இ போ. ச. பிராந்திய அதிபரைம் கேட்டுக்கொள்வதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org